## தலையங்கம்

# கலை மகள் நீ !
# தாமரைச் செல்வியும் நீ!!
# ஜெகதம்பாவும் நீயே !!!

ஆரம்ப காலம். அஞ்ஞான இருள் விலகும் உதய வேளை. ஓம் மண்டலி சத்சங்கத்தில் ஞானக் குழந்தைகள், உலகமறியா எல்லையற்ற எல்லாம் வல்ல சிவ பரமாத்மா, பிரம்மா மூலம் அருளும் ஞானாமிருதத்தைப் பருகிய வண்ணம் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த நேரம். அங்கு அனைத்துத் தரப்பினரும், விசேஷ குடும்பத்தைச் சார்ந்த மகளிரும் கூட ஆர்வத்துடன் வந்து கொண்டிருந்தனர். பரமாத்மாவாகிய இறைவனிடமிருந்து நேர்முக மாக, முதன் முறையாக சத்தியமான ஆன்மீக ஆரம்பப்பாடம் கற்கும் இவர்கள் தான் எத்தனை பாக்கியவான்கள் !

இத்தகைய ஆன்மீக மணம் கமழும் சூழ்நிலையில் இள மகளிர் ஒருவர் அங்கு வந்தார். பாபாவைச் சந்தித்தார். அர்ப்பணமும் ஆகிவிட்டார். இங்கு இப்போது வந்திருக்கும் இப்பெண்மணி யார்? என்று இறைவன் ஒருவரைத் தவிர வேறுயாரறிவார்? ஆனால் வந்து சேர வேண்டிய உரிய தருணத்தில் வர வேண்டியவர் தான் வந்திருந்தார். அவரைப் பற்றி அங்கிருந்தோர் அறியாவிட்டாலும், அங்கு அவர் வந்த சிறிது நேரத்திலேயே அனைவரிட மும் அவர் நடந்து கொண்ட பாங்கு, அனைவரும் அவர்பால் ஈர்க்கப்பட்டு விட்டனர் என்றே தோன்றியது. அப்பெண்மணியின் வயது 18 இருக்கும். சமுதாய ரீதியான உயர் அந்தஸ்து இல்லாதவர்தான், சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர். வயதிலும் முதியவர் அல்ல. இளம் வயதினர் தான். ஆனால் அங்கிருந்த அனைவரும் இவரை எங்கள் அன்னையே ! என்று அழைக்க விரும்பினர் என்பது மிகையல்ல. தோற்றத்தில் அத்தனை கம்பீரம்

## சங்கமயுகம்

## பொருளடக்கம்


மலர்: 26 ஜுன் - ஜுலை 12 இதழ்: 2


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 03 |
| 3. | தந்தையும் நீ..... | 04 |
| 4. | நல் எண்ணங்களின் ஒத்துழைப்பு | 06 |
| 5. | சகோதரி மோகினிஜி (நியூயார்க்) | 08 |
| 6. | கேள்வி-பதில் | 12 |
| 7. | பாட்டு (ஜெகதம்பா) | 14 |
| 8. | உணவு, உடல் ஆரோக்கியம்... | 19 |
| 9. | ஆற்றல் சக்திகள் செயல்படும்... | 21 |
| 10. | எனது கேள்வி-இறைவனின்... | 24 |
| 11. | சுமையை சுகமாக்குவோம் | 26 |
| 12. | ஜெகதம்பாவின் பண்புகள் | 29 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.

ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**





மற்றும் கனிவான பார்வை. பார்வையில் இத்தனை கனிவை யார் தந்தது? கணீரென ஒலிக்கும் குரலிலோ வெண்கல மணியின் மங்கள நாதம் - எப்படி வந்தது? வாய்மொழியிலோ எத்தனை சரளமான சத்திய வாக்கு ! இந்த அருள் வாக்கில் இத்தனை இனிமையா? கரும்புச் சாற்றில் கற்கண்டை யார் கலந்தது ? வியப்பில்லை தான்- உலக அன்னையின் தூய தாயுள்ளத்திற்கு இத்தனை ஈர்ப்பு இருக்கத் தானே செய்யும் !

ஆம். அன்னை என்ற பொறுப்பு இப்போது அதிகார பூர்வமாகவே நாடி வந்து விட்டது. அங்கிருந்த சகோதர சகோதரிகள், குழந்தைகள் ஆகியோரைக் கவனத்துடன் பாலனை செய்யும் நாடிவந்த பொறுப்பை அன்போடு ஏற்றுக் கொண்டார். ஆச்சரியம் என்னவென்றால், சத்சங்கத்தில் ஏற்கனவே இருந்த இவருடைய லௌகீக தாயும் கூட, இவரை அம்மா (மம்மா) என்றே அழைத்தார் என்றால் இவரின் மகிமைதான் என்ன? இவ்வாறாக அங்கிருந்த அனைவரின் அன்பிற்கும், நன் மதிப்பிற்கும், நம்பிக்கைக்கும் உத்தரவாதமுள்ள பாத்திரமாகிவிட்டார்.

இதில் இவரிடமிருந்த விசேஷத்திற்கு காரணம் என்னவென்றால், பாபா அருளும் அருள் மொழிகளை உடனுக்குடன் நடைமுறையில் தாரணையில் கொண்டு நடந்ததுதான். இவர் அங்கு ஒரு களைப்பற்ற சேவாதாரியாக சேவை செய்தார். எடுத்த காரியம் முடிந்ததும், களைப்பும் முடிந்து விடும். குறிப்பாக, அவரிட மிருந்த அன்பும், இனிமையும் அளவற்றதாக இருந்தது. இவரிடமிருந்த இன்னொரு விசேஷம் இனிமையாகப் பாடும் திறமை யுடையவர். வீணை நாதத்தோடு இணைந்து இவர் பாடுகின்ற அழகே தனிப் பட்டது. ஆங்கிலத்தில் நன்றாகப் பேசும் திறமையும் இவரிடம் உண்டு. தோற்றத்தில் சிறிது மேற்கத்திய நாகரீகம். ஆனால் இறைவனிடம் முழுமையான அர்ப்பணம்.

முக்கியமாக, இவர் சகோதரிகளுக்கும், மாதாக்களுக்கும், சகோதரர்களுக்கும் மிகச் சிறந்த பயிற்சி அளித்ததன் காரணமாக இவர்கள் எல்லோரும் வெகு சீக்கிரமாகவே உலக சேவைக்கு தகுதியுடையவர்களாகி விட்டனர்.

பிரம்மா பாபாவைப் போல ஜெகதம்பா அவர்கள் உலகளாவிய சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால் உலக சேவையின் நிமித்தம் மற்றவர்களைத் தயார் செய்வதில் அஸ்திவாரமாக இருந்தார். அதே சமயம், தனது சுயபரிவர்த்தனை மூலமான முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக் கொண்டார் தன்னை சம்பன்னம் மற்றும் சம்பூரணமாகவும் ஆக்கிக் கொண்டார்.

மேலும் ஜெகதம்பா (மம்மா) பிரஜா பிதா பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் அன்றாட நிர்வாகத்தில் பிரம்மா பாபாவுக்கு உதவியாளராகவும், வலது கரமாகவும் விளங்கினார். குறிப்பாக, இவர்தான் பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகத்தின் முதலாவது அதிகார பூர்வ தலைமை நிர்வாகி.

இவ்வாறாக சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஜெகதம்பா சரஸ்வதி நிச்சயிக்கப்பட்டபடி 1965 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் நாள் தனது பூத உடலைத் (40-வது வயதில்) துறந்து. இன்றைய சங்கமயுகத்தில் உலக மறுமலர்ச்சிக்கான சேவையின் நிமித்தம் அட்வான்ஸ் பார்ட்டியில் சென்றுவிட்ட தூய்மையான ஆத்மாக்களை வழி நடத்தும் பாத்திரம் இவருக்காக காத்திருந்தது போலும்! வந்தார், வென்றார், சென்றார் அனைவர் உள்ளத்திலும் அமர்ந்து விட்டார்.




## காலக் கடிகாரம்

இனிமையான குழந்தைகளே ! உலக காலக் கடிகாரத்தில் இப்போது மணி எத்தனை? உலக வரலாற்று சக்கரத்தை உன்னிப்பாகக் கவனியுங்கள். இப்போதைய உலகின் கலியுகம் முடியும் தறுவாயில் இருக்கிறதல்லவா ! இதனைத் தொடர்ந்து பொற்காலம் ஆரம்ப மாகும். ஆதலால் இன்றைய மங்களகரமான சங்கமயுகத்தில் உங்களைத் தகுதியுடைய வர்களாகத் தயார் செய்து கொள்ளுங்கள்.

நற்குணங்கள் நிறைந்த நேர்மையான சத்யுகம் ஸ்தாபனையாவதற்கும், தீய குணங்கள் மலிந்த, அதர்மம் நிறைந்த கலியுகம் அழிவதற்குமான நேரம் இதுதான். மனித வரலாற்றில் துயரமும், குழப்பமும் நிறைந்து, அமைதியிழந்துவிட்ட உங்களுக்கு அவசியமான மிகவும் நுணுக்கமானதும், மிகச்சரியானதுமான நீதி போதனைகள் வழங்குவதற்காக சிவம் ஆகிய நான் அவதரித்திருக்கிறேன். சுகமான வாழ்வுக்கு ஆதாரமாயிருக்கின்ற கீதை ஞானத்தை மீண்டும் உபதேசிக்கின்றேன்.

நீங்கள் முக்தி வேண்டும் என்று வாழ்நாளெல்லாம் என்னைத் தேடி அலைந்து கொண்டே இருந்தீர்கள். ஆதலால் இப்போது உங்களுக்கு இந்த வாழ்க்கையிலிருந்து முக்தியும் தொடரும் காலச்சக்கரத்தில் பல பிறவிகளுக்கு ஜீவன் முக்தி எனும் சொர்க்க வாழ்க்கையும் அடைவீர்கள். நான் யார், எங்கே, எப்படி இருக்கின்றேன், என்ன செய்கின்றேன் என்பதை அறிவதன் மூலம் ஒரு வினாடியில் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

# தந்தையும் நீ, நல் ஆசிரியன் நீ, சத்குருவும் நீயே !

பிரம்மா பாபா எப்போதுமே, இந்த மூன்று விதமான உறவைப் பற்றியே வர்ணனை செய்து, மனதில் ஆழமாகப் பதியும்படி செய்தார். ஏனெனில் இந்த உறவுதான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம்.

ஆத்மாவானது, எப்போது தனது தந்தையைப் புரிந்து கொள்கிறதோ, அப்போதே தனது பிதுரார்ஜிதமாக கிடைக்கவிருக்கும், சொத்துரிமையும் நினைவுக்கு வரும். கடவுளிடமிருந்து கிடைக்கும் சொத்து எது? எல்லையற்ற ஞானம், அமைதி, ஆனந்தம் அன்பு மற்றும் தூய்மை. இதனை உடனேயே தனது வாரிசுரிமையாகப் பெறலாம். இதன் காரணமாக கடவுளிடம் எனக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டுப் பெற வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விடுகிறது. ஏனெனில், தான் கடவுளின் வாரிசு ஆகையால் இயல்பாகவே அவருடைய பாலனை எனக்குக் கிடைத்துவிடுகிறது. ஆத்மாவானது, நான் கடவுளின் குழந்தை என்பதை உணர்ந்து கொள்கிறது. ஆதலால் கவலை எதுவுமில்லை. எதிர்மறை சக்திகளிட மிருந்து, முழு பாதுகாப்பும் கிடைத்துவிடுகிறது. கூடவே, ஆத்மாவுக்கு தான் எத்தகைய குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற உணர்வும் இருக்கின்றது.

கடவுள் எனது தந்தை என்பதை எப்போது புரிந்து கொள்கின்றதோ, அப்போது தானாகவே ஜீவாத்மாக்கள் அனைவரும் சகோதரர்கள், சகோதரிகள் என்பதும் புரிந்து விடுகிறது. இதன் காரணமாக ஜாதி, மதம், இனம் பேதம் என்ற பாரபட்சமுள்ள உணர்வு கள் அனைத்தும் பொருளற்றதாகி விடுகிறது. இது ஒரு நல்ல தூய்மையான வாழ்வுக்கு வழி காட்டியாகவும் ஆகிவிடுகிறது. கடவுளாகிய தந்தைக்கும், குழந்தைக்கும் இடையேயான உறவு எப்படிப்பட்டதென்றால், கடவுளும், கடவுளிடமுள்ள அனைத்தும் குழந்தைக்கு அர்ப்பணிக்கப்பட்டு விடுகிறது. இது போலவே குழந்தையும் தந்தையிடம் முழுமையாக அர்ப்பணமாகி விடுகிறது. சிவபரமாத்மாவாகிய தந்தை தான் எவ்வளவு **மேன்மையுள்ள தந்தை** எனும் பாத்திரத்தை பிரம்மாவின் சரீரத்தின் மூலமாக நடந்து காட்டிவிட்டார். இதுபோலவே பிரம்மாவும், மனித குலத்தின் தந்தை என்ற பாத்திரத்தை ஒளிவு, மறைவு இன்றி எல்லாமே தெய்வீக குழந்தைகளுக்குத் தான் என்பதை நடைமுறையில் கொண்டு பாலனையும் செய்தார்.

அடுத்து குழந்தைக்கு அவசியமானது கல்வி. ஆகையால் தானே **ஆசிரியராகி**, படைப்பவர் மற்றும் படைப்பு பற்றிய ஞானம் தந்தார். அனுதினமும் குழந்தைகள் எப்படி யெல்லாம் ஞானத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும் எப்படிப்பட்ட தெய்வீக குணம் உடையவராக வேண்டும், எப்படி சத்தியமான ஆசிரியரின், சம்பூரண மடைந்த படைப்பாக ஆக வேண்டும். எப்படி உலகை ஆளும் தகுதியுடைய எஜமான் ஆக வேண்டும் என்பது பற்றியெல்லாம் கற்பித்தார். ஒவ்வொரு நாளும் பரமாத்மாவாகிய சிவன் கற்பிக்கும்போது, தான் ஆதாரமாக ஆட் கொண்ட கருவியான பிரம்மாவும், கற்பிக்கும் கலையை அப்போதே கற்றுக் கொண்டு, தந்தையைப் போன்றே தானும் அதி மேன்மை யுள்ள ஆசிரியருமானார். மற்றெல்லா குழந்தை களாகிய மாணவர்கள் பின்பற்றி நடக்கக்கூடிய முன் மாதிரியுமானார். ஞானம் வருமானத்திற்கு ஆதாரம். ஞான வழிப்படி தூய கர்மங்கள் செய்யும்போது, ஆத்மாக்கள் அநேக ஜென்மங் களுக்கு மிக உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கி விடுகிறார்கள்.

முடிவாக, **சத்குருவாகி (சுப்ரீம் குரு)** எப்படி நிரந்தரமாக அசரீரியான ஒரு தந்தையின் நினைவில் நிலைத்திருப்பது என்பதை நடந்து காட்டினார். பிரம்மா இதில் தனது முழு முயற்சியையும் ஈடுபடுத்தினார். இந்த முயற்சி எத்தகையது என்றால், கடைசி மூச்சின் போது கடவுளின் நினைவு இருக்க வேண்டும். அந்த அளவுக்கு பிரம்மா, தனது நடைமுறை வாழ்க்கையில் நிரந்தர நினைவில் நிலைத்திருந்து, பல பிறவியின் கணக்குகளை முடித்துக் காட்டினார். மாசு படிந்துவிட்ட சம்ஸ்காரத்தை மகிமைக்குரிய பூஜைக்குரிய, தெய்வீக சம்ஸ்காரமாக மாற்றிக் காட்டினார். கடவுளிடமிருந்து, முக்தியடையும் வழி அறிந்து, விமோசனம் அடைந்தார் என்பதை தத்ரூபமாகப் பார்க்க முடிந்தது.



## தேர்ந்தெடுங்கள் விளையாட்டை இப்போது.....

**பி.கு அறவாழி, அடையார்**

வாழ்க்கை என்பது இறைவனை நினைப்பதும் மற்றும் மறப்பதுமான **விளையாட்டு !**
குழந்தைகள் விளையாடுவது ஒரு **விளையாட்டு !**
உலகில் மனிதர்கள் போடும் ஆட்டம் ஒரு **விளையாட்டு !**
இறைவனுக்காக தனது உடல், மனம், பொருளை அர்ப்பணிப்பது ஒரு **விளையாட்டு !**

உலகம் புதியதாகவும் பின்பு பழையதாகவும் மாறுவது **விளையாட்டு !**
அரைகல்பம் சொர்க்கம், அரை கல்பம் நரகம் என்பதும் **விளையாட்டு !**
செல்வந்தர் ஏழையாவதும் ஏழைகள் செல்வந்தர் ஆவதும் **விளையாட்டு !**
முற்பிறவியின் பலனை இப்போது அனுபவிப்பதும், இப்பிறவியின்

பலனை மறுபிறவியில் அனுபவிப்பதும் கர்மக்கணக்கின் **விளையாட்டு !**
அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்ட
இறைவன் இப்பூமிக்கு வருவதும் **விளையாட்டு !**
அழுபவன் சிரிப்பதும், சிரிப்பவன் அழுவதும் ஒரு **விளையாட்டு !**

இறுதியில் விஞ்ஞான சக்தி உலகை அழிப்பதும்,
இயற்கை சக்தி உலகை அழிப்பதும், மனிதர்கள் மனிதர்களை அழிப்பதும்,
உலகில் யாராலும் தடுக்க முடியாத இயற்கையான **விளையாட்டு !**

ஆன்மீக சக்தியை திரும்பப் பெறுவதும் ஒரு அற்புத **விளையாட்டு**
சிரேஷ்டமான நிலையை அடைவதும் ஆனந்தமயமான **விளையாட்டு !**
**இதில் உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு எது ?**

**தேர்ந்தெடுங்கள் இப்போது !**



# நல்லெண்ணங்களின் ஒத்துழைப்பைக் கொடுங்கள்

- தாதி குல்சார்ஜி (நன்றி ஞானாமிர்தம்)
தமிழாக்கம் பி.கு, சுந்தரராஜன், அயனாவரம்

நல்லெண்ணம் மற்றும் நல் விருப்பம் இந்த வார்த்தைகளை பாபா அடிக்கடி கூறு கின்றார். இந்த நல்லெண்ணம், நல் விருப்பம் நமது இயல்பான வாழ்க்கையாகவே ஆகிவிட வேண்டும். எந்தளவு விசேஷத்தன்மையை பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள் கிறோமோ அந்தளவு மாயா குறைவாக வரும். யாரைப் பற்றியாவது வெறுப்பான பார்வை ஏற்படுகிறதென்றால் அப்போது தேவையற்ற சிந்தனைகள் (மனதில்) ஓடுகின்றன. நிகழ்காலத் தின் பலவீனமாக இதைத்தான் பாபா கூறியுள்ளார். வீணான எண்ணங்கள் புத்தியை பலவீனமாகவும் சமயத்தை வீணாக்கும் அளவிற்கு அதி விரைவாக உண்டாகிறது. எனவே தான் பாபா கூறுகிறார். அவகுணங் களை பார்க்காமல் இருந்தால் வீணான எண்ணங்களும் ஏற்படாது. விசேஷத் தன்மையை பார்த்தோமானால் எண்ணங்களும் கூட நன்மை தரக்கூடிய தாகவே இருக்கும். பலவீனமாக உள்ள யாருக்கும் நல்லெண்ணம், நல் விருப்பத்தின் (ஒத்துழைப்பு) சகயோகம் தந்தால் உங்களுடைய புண்ணிய கணக்கில் சேமிப்பாகும்.

ஒருவர் மிகவும் உடல் நலக்குறைவாக இருக்கிறார் அப்போது அவருக்கு ஆதரவாக இருந்தீர்களானால், அவருடைய வாயிலிருந்து என்ன வெளிவரும்? ஆசீர்வாதங்கள் தான் வெளிவரும் அல்லவா? கீழே விழுந்தவரை தூக்கி விட்டால் அவருடைய வாயிலிருந்து என்ன வெளி வரும்? உங்களை என் வாழ் நாள் முழுவதும் மறக்கவே மாட்டேன் என்று கூறுவார். இது ஆசீர்வாதம் ஆகிறதல்லவா!

இப்போது தனது கட்டுப்படுத்தும் மற்றும் கட்டளையிடும் சக்தியை அதிகரியுங்கள். அந்த சக்தி பாபாவின் நினைவினால் கிடைக்கும். என்னுடைய பாபா என்று கூறினால் நினைவு செய்வதும் ஒன்றும் கடினமல்ல. முழு நாளும் நினைவு இருக்கிறதா என்பதை சோதியுங்கள். என்னுடைய வேலை, எனது சம்மந்தம், எனது சரீரம், எனது... எனது என்பதுதான் நினைவில் இருக்கிறது. அதுபோல என்னுடைய பாபா என்று கூறினாலும் கூட என்னுடைய என்பது நினைவில் வரும் அல்லவா? வேறெந்த நினைவுமே வராது. ஆக எனது எனது எனக் கூறுகின்றவர் **நான் ராஜா** இதை மறக்கக்கூடாது. பாபா கூறுகிறார் - முடியக்கூடிய சமயம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. ஃபரிஷ்தா வாகி பிறகு தேவதை ஆக வேண்டுமெனில் நாம் ஃபரிஷ்தா ஆகிறோமா என்பதையும் சோதித்துப் பாருங்கள். நாம் இராஜா ஆகிறோமா என்பதையும் கூட சோதித்துப் பார்க்கவும் ஃபரிஷ்தா ஆவதென்பதும் மிகவும் சுலபம். தன்னுடைய சுமையை தன் மீது வைத்துக் கொள்ளாமல் பாபாவிடம் கொடுத்து விடுங்கள், அவ்வளவே. இந்த வீணான எண்ணங்கள், வீணான பேச்சு இவைகள் தான் சுமையாகிறது. பாபா கேட்கின்றார் - இந்த சுமையை ஏன் சுமக்கின்றீர்கள்? வீணானதை நல்லவையாக (உபயோகமுள்ளவையாக ஏன் மாற்றிக் கொள்வதில்லை ?

பாபா எப்பொழுதுமே சொல்வது - அதிகாலை (ஞான) வகுப்பு மிகச் சிறந்தது. தினமும் அதிகாலையில் மனதிற்கு ஞான

சிந்தனை என்ற உணவை ஊட்ட வேண்டும். மனதிற்கான உணவுதான் இந்த முரளி. இல்லையெனில் காலியாக இருக்கும் மனம் சைத்தானுடைய (துர்தேவதை) வீடு எனக் கூறப்படுகிறது. மனதை ஞான சிந்தனை யால் நிரப்பிக் கொள்ளுங்கள், வீணானவற்றை நன்மையானதாக மாற்றிக் கொள்ள வேண்டும். முரளி கேட்பதென்றால் அதில் பாபா என்ன சொல்கின்றாரோ அதை நடை முறையில் செய்வது, வெறுமனே படிப்பது மட்டுமல்ல, அதன் இலாபத்தை எடுக்க வேண்டும். மனதிற்கு சுத்தமான உணவளித்தால் வலி மையுள்ள மனமாக ஆகிவிடும். முரளி மீது எந்தளவு பிரியம் உள்ளவரோ அப்போது பாபாவும் சொல்வார் எனக்கும் கூட பிரிய மானவரே என்று. ஏனென்றால் பாபாவிற்கு முரளி மீது அத்தனை பிரியம். உங்களுக்கு பாபா மீது அன்பு உள்ளது. அப்படியானால் பாபாவிற்கு எதன் மீது அன்பு உள்ளதோ அதன் மீதே உங்களுடைய அன்பும் இருக்க வேண்டும். எந்தளவு பாபாவிடம் அன்புள்ளதோ அதே போல பாபாவின் மகா வாக்கியங்களின் மீதும் அன்பு இருக்கட்டும். இதற்குத்தான் பாபா சொல்கிறார் - ஸ்ரீமத் என்று.

அமிர்த வேளையிலிருந்து செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் பாபா ஸ்ரீமத் கொடுத்துள்ளார். சகஜயோகி ஆக வேண்டு மானால் ஒவ்வொரு காரியத்தையும் ஸ்ரீமத்- படி செய்யுங்கள். கண்களால் எவற்றை காண வேண்டும், வாய் மூலம் என்ன பேச வேண்டும் போன்ற அனைத்திற்குமே பாபா வழி முறைகள் கூறியுள்ளார். பாபா கூறியவற்றை சோதித்துப் பார்த்தாலே போதும். சரி, நான் என்ன பார்க்கிறேன்? (கண்களால்) பார்ப்பதற்கு பாபா என்ன அறிவுரை கொடுத்துள்ளாரோ அதைத்தான் பார்க்கிறேனா அன்றி சரீரத்தைத்தான் பார்க்கிறேனா? பாபா ஸ்ரீமத்படி என்றால், கவலையற்றவர் ஆகிவிடு வீர்கள், இலக்கை அடைந்தே விடுவீர்கள்.,

## சிந்திக்க.... பி.கு சுவாதி, புதுக்கோட்டை

நாம் அனைவரும் கோபத்தை விட்டொழிக்க வேண்டும் என்பதே இராஜ யோகிகள் விரும்புவது. ஆனால் **கோபம் இருக்கிற இடத்தில் தான் குணம் இருக்கும்** என்ற பழமொழியை கேட்கிறீர்கள். பழமை காலத்தில் கோபப்படச் சொல்லியிருப்பார்களோ என்று பார்த்தால் நிச்சயம் அப்படியில்லை. அதாவது **கோபம் இறக்கிற இடத்தில் குணம் இருக்கும்** என்றார்கள். கோபம் என்ற உணர்வு இறக்க வேண்டும் என்பதைத்தான் பின் நாளில் நம் மக்கள் இப்படி மாற்றி விட்டார்கள். இதே போலவே **புண்பட்ட நெஞ்சை புகை விட்டு ஆற்று** என்ற ஒரு பழமொழி. அப்படியானால் நம் முன்னோர்கள் நம்மை தீய பழக்கத்திற்கு அடிமையாகச் சொல்லியிருப்பார்களா?. நிச்சயமாக அப்படி இல்லை. **புகை பிடித்ததினால் ஏற்கனவே புண்ணாகியிருக்கும் நமது நெஞ்சை புகையை விட்டு விட்டால் ஆறும், ஆற்ற வேண்டும்** என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் தான் மாற்றி புரிந்து கொண்டு தவறு செய்கிறோம்.

நமது பாபாவின் மொழிகள் மிகவும் புனிதமாக, கிடைத்த அமுதமாக, இனிக்கும் விருந்தாக இருக்கிறது. இதனை பின்பற்றி வாழ்ந்தாலே ஒவ்வொரு மனிதனும் தான் சாதிக்க வேண்டும் என்று நினைத்தவற்றை நிச்சயமாக சாதிக்க முடியும்.

தினமும் சொல்லும் பாடங்களை மனதில் பதிய வைப்போம். வாழ்வில் புதுமை செய்வோம் மனதால் அன்பு செய்து அகிலத்தை தூய்மையாக்கி அமைதிக்கு வித்திடுவோம்.



# சகோதரி மோகினிஜி (நியூயார்க்) அவர்களுடன் நேர்முகப் பேட்டி

தமிழாக்கம் பி.கு. துர்கா பிரசாத் (சாந்திவன்)

**நினைவைப் பற்றியும் நினைவு சக்தியைப் பற்றியும் உங்களுடைய மேலான கருத்துக்கள் சிறிது விளக்கமாகக் கூறவும்.**

பரமாத்மாவாகிய சிவபாபாவை நினைவு செய்யும்போது நம்முடைய குறிக்கோளானது அப்பரம்பொருளுடன் முழுமையாக அன்புடன் லயித்து விட வேண்டுமென்ப தாகவே இருக்கும். ஆதலால் அந்த எண்ணத்துட னேயே, அவர் அன்பில் நான் யோகத்தில் அமர்வேன். நினைவு சக்தியானது எந்த அளவு நாம் வளர்த்துக் கொள் கின்றோமோ அதற்கேற்றவாறு அச்சக்தியானது வளர்ந்து கொண்டுப்போகும். மேலும் நினைவானது சரியான நேரத்தில் செய்ய வேண்டும். ஒன்றை மறக்காமல் இருக்கவே நாம் நினைவு செய்கின்றோம். நல்ல நினைவாற்றல் கொண்டவர் எதை நினைக்க வேண்டுமோ அதை மட்டும் நினைவு கொள்ளும் தன்மை படைத்தவராக இருப்பர். நம் இயல்பான முறையில் பாபாவின் நினைவில் எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ இருப்போம், அந்த அளவு எதை மறக்க வேண்டுமோ அதை மறப்போம், உண்மையானது சரியானது எதுவோ அதையே நினைவு கொள்வோம். அந்த நிலையில் பாபாவுடன் அன்போடு இணைந்து விடும் அனுபவம் செய்யலாம். நினைவிலேயே, கூடிய அளவு நிலைத்து அச்சக்தியை நாம் வளர்த்துச் சென்றால், சரியான நேரத்தில் நமக்கு அறிந்து கொள்ள வேண்டியவை மனதிலே தோன்றும்.

நீங்கள் ஒரு நாளைய காரியங்களை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் என்று தாதி மன்மோகினிஜி அவர்கள் நமக்குச் சொல்வார். நான் பாபாவிடம் வரும்பொழுது, பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன், கூடவே ஒரு சென்டரும் நடத்திக் கொண்டிருந்தேன். எவ்வாறு இவை இரண்டும் சமாளிப்பது என்று மம்மாவைக் கேட்டேன். அவரும் சொன்னார், **இன்று செய்ய வேண்டியவை** எனும் பட்டியலை இதற்காகத் தயாரித்துக் கொள்ள வேண்டும், ஒரு செயல் திட்டமாகவேயன்றி, ஒரு சுமையாக அல்ல. புத்தியானது தெளிவாக மற்றும் எளிமை யாக வெளிப்பட்டால் அளவில்லாத இந்த உலக நாடக ஞானமானது மெல்ல தானாக நகர்ந்து செல்வதைக் காணலாம். தெளிவான புத்தி என்றால் என்ன? இதற்கு நாம் கடவுளிடம் உண்மையான நினைவு உடையவராக இருக்க வேண்டும். ஒரு காரியத்தை செய்ய வேண்டு மென்றால் தேவை யில்லாத மற்றவை எல்லாம் மறந்து, அதையே நினைவு வைக்கின்றோம். ஆதலால் நம்முடைய மற்ற வெளிப் பொறுப்புகள், எவ்வாறான மன அழுத்தம், உளைச்சல் ஆகியவைகளின் பாதிப்புகளுக் குள்ளாகாமல், அவற்றை திறமையாக சமாளித்து, எவ்வித அலைச்சலும் நம்மில் காணவராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய தோற்றம், நிலையான நல்ல யோகியை எடுத்துரைக்க வேண்டும். சிலர், சகோதரி மோகினி அவர்களை **ஒரு அமைதியான ஜயன்ட் மிகுதியான திறமை உள்ளவர்** எனும் பொருள் பட அழைப்பார்கள். இதை நான் நல்லதாகவே எடுத்துக் கொள்வேன், ஏனென்றால் நாம் உடல் வளத்துடனும், சக்தியுடனும் வேலை செய்திட மன அமைதி அவசியமாகிறது அதிக வேண்டாத சிந்தனைகளில் மனதை வீணாக்கினால் காரியம் தொடங்கு முன்னரேயே களைப்புத் தோன்றிவிடும்.

பாபா பல முறை கூறி இருக்கிறார், **என்னை உங்கள் தோழனாக ஆக்கிக் கொள்ளுங்கள். அவ்வாறு பாபாவை நண்பனாக ஆக்கிக் கொள்ளும்போது இயல்பாகவே நினைவு என்பது நம்மில் நிலைத்து விடுகிறது. நான் உங்கள் நண்பன் என்று அவர் சொல்லும் போது, இதை எவ்வாறு நீங்கள் அனுபவத்தில் உணர்கிறீர்கள்?**

இதில் எனக்கு எப்பொழுதும் நினைவில் உள்ள பல அனுபவங்கள் உண்டு. 1972 ஆம் ஆண்டு நான் லண்டனுக்குச் செல்ல வேண்டியிருந்தது. **வீசா** கிடைக்கக் காலத்தாமதமானதால் ஜெர்மன் நாட்டுக்கு முன்னதாகச் சென்றேன். பாபா அவ்யக்தமானப் பிறகு இவ்வாறு நான் பல வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதில் நான் **ஹாஞ்சி** (ஆமாம்) என்று உடனே சொல்வதால் முன்னேற்றம் காண முடியும் என்பதை உணர்ந்தேன். ஆதலால் எந்த விதமான பிரச்சனைகள், சூழ்நிலைகள் எதிர்கொள்ள வேண்டி வந்தாலும், காட்டுக்குச் செல்ல வேண்டி வந்தாலும், நான் சமாளிக்க வேண்டும் என்ற குறிக்கோள், தைரியம் முதலிலிருந்து என்னில் இருந்தது. அந்நேரங்களில் **பாபா நீங்கள் என்னுடன் வாழ்பவர் அல்லவா ?** என்று நான் சொன்னவுடனேயே என் தோளின் மீதுள்ள சுமைகள் குறைந்து அவர் ஒரு பாதியும் நான் ஒரு பாதியும் சுமப்பதாக உணர்வேன். ஜெர்மனியில் இரண்டு மாதங்கள் இருக்க வேண்டி வந்தது, மேலும் 7 ஐரோப்பிய நாடுகளில் ஒரு வாகனத்தில் இரண்டு இளம் சகோதரர்களுடன், சுற்றுப் பயணம் செய்து முடித்தோம். இருவரும் 24 வயதுடையவர்கள். நான் 30 வயதுடையவராக இருந்தேன். அவர்கள் முன்னால் அமர, நான் பிற்பகுதியில் அமர்ந்து செல்வேன். அழைப்பு கிடைத்த இடத்திற்குச் சென்று பல குடும்பத்தாருடன் இருந்து வந்தோம். பாபா என் உடனிருப்பதாக நேரிடையாக அனுபவம் செய்தேன்.

முடிந்த வேளைகளில் பாபாவைப்போல யோகாசனத்தில் அமர்ந்து, சிவபாபாவினுடைய கிரணங்களை ஏற்பேன். சிவபாபாவுடன் இணைந்த சொரூபத்தை பல முறை நல்ல அனுபவங்களாக அடைய பெற்றேன். நாள் முழுவதும் அவரிடத்திலிருந்து சகாஷ் பெற்று சிவ சக்திகளின் இணைந்த நிலையை என்னில் வளர்த்துக் கொள்வேன். நாம் சிவபாபாவும், பிரம்மபாபாவும் எவ்வாறு இணைந்து செயல்பட்டார்கள் என்பதை பார்த்திருக்கிறோம். அவ்வாறே நானும், சிவபாபாவுடன் இணைந்த சொரூபத்தினை அனுபவம் செய்வேன். நம்முடைய உள்ளத்தில் பாபா வீற்றிருக்க ஏற்றதாக வாழும் அறையை (லிவிங்க் ரூம்) நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். மன நிலையானது அவ்வளவு தூய்மையானதாக இருக்க வேண்டும். பாபா வாழக்கூடிய நம் உள்ளத்து அறையானது அம்மா - பெரும் விருந்தாளியை வர வேற்கும் வகையில் இருத்தல் வேண்டும். பாபா நம் உள்ளத்திலிருப்பவை எல்லாவற்றையும் விரும்பி ஏற்கும்படி இருத்தல் வேண்டும். கடவுளும் நாமும் ஒருங்கே அமர்ந்து, உரையாடல் செய்யக் கூடிய வகையில், நம் உள்ளே அவ்வளவு அருமையான வாழும் இடம் நாம் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நான் எப்பொழுதும் உணர்வேன் நம் மன நிலையை மிக மிகத் துள்ளியமாகவும், தூய்மையாகவும் வைத்து கொள்ள வேண்டும். பாபாவின் முன்னிலையில் நேரிடையாக நாம் அனுபவம் செய்ய வேண்டும். நான் இணைந்த சொரூபத்துக்கு நிறைய கவனம் செலுத்தி இருக்கிறேன். இப்போதைய காலக்கட்டத்தில், நமக்கு எத்தகைய பொறுப்பு இருந்தாலும், யோக யுக்த் நிலையில், பகவானின் காரியத்தைச் செய்து முடிக்க இணைந்த சொரூபத்தில் நிலைத்திருப்பது மிக அவசிய மானதாகும்.

நான் எப்பொழுதும் எவ்விதமான கடுமையான பிரச்சனையையும் எதிர் கொள்ள

தயங்குவதில்லை, ஆனாலும் பாபாவுடன் இருக்கும் உறவினால் கிடைக்கும் ஆழ்ந்த அனுபவங்கள் மிகவும் நமக்குத் தேவைப்படு கிறது. வாழ்க்கையானது எளிதாகச் செல்ல வேண்டுமென்றால் எல்லாம் வல்ல இறைவனை நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் சிறிது அலட்சியமாக இருந்து விட்டால் அவரும் நம்மை விட்டு விலகி விடுவார். நம் காரியங்களை கடவுளின் சக்தியுடன் செய்ய வேண்டுமேயன்றி நம்முடைய சக்தியினால் அல்ல. வெகு சிலரே இந்த உணர்வில் செயல்படுகிறார்கள். அவருக்கு அடக்கமான பணிந்த குழந்தையின் லட்சணம் இதுவேயாகும். என்னுடைய இயல்பான சக்திகளுடன் மேலிருந்து கிடைக்கும் அவருடைய சக்திகள் மிகவும் என்னைப் பலப்படுத்துகின்றன. பாபா என்னுடைய தோழன், வேண்டியபோது நான் கதவைத் தட்டுவேன் உடனே அவர் உதவ வெளிப்படுவார்.

இதையே வேறு விதமாகவும் நாம் காணலாம். இது பாபாவின் வேலையாகும், தேவையாகும் போது என் உதவி அவருக்கு வேண்டியதாக இருக்கும், எனக்கு இவர் தேவை என நான் ஏன் நினைக்க வேண்டும்? **பாபா நமக்கு உதவுகிறார்** என்று நாம் சொல்கின்றோம், ஆனாலும் **நாம் அவருக்கு உதவி செய்கிறோம்.** பாபா எப்பொழுதும் சொல்கிறார், குழந்தையே **இது செய் இது செய்** என. ஆதலால் யாருடைய வேலை இது? நாம் சொல்கிறோம் பாபா உதவுகிறார். ஆனால், நாம் பாபாவுக்குச் சொல்ல வேண்டும், **பாபா நான் தயாராக இருக்கிறேன் உங்களுக்கு உதவிச் செய்ய நீங்கள் செய்கிறீர்கள், நான் உதவுகிறேன். இதுவே இணக்கமான** உறவாகும் (கம்பானியன்ஷிப்) **பாபாவுக்கு நான் இவ்வளவு செய்தேன்** என்று எப்பொழுதும் கூறக்கூடாது. எல்லாம் பாபாவினுடையதே **நான் இதில் எடுத்துக் கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது?** என சொல்ல வேண்டும் இவ்விஷயங்களில் ஆழமாகச் செல்ல வேண்டும். நம்முடைய நேரமும் பாபா வினுடையதே நம் உடலும் அவருடையதே. பாபா விரும்புவது இத்தகைய வாரிசுக் குழந்தைகளே. நான் இதை உபயோகிக் கலாமா? இந்த வேலையானது யாருடையது? அவர் என்னைத் தன்னுடைய குழந்தையா கவும், கருவியாகவும் எடுத்துக் கொண்டார். ஆதலால் நான் ஆமாம் என்று சொல்ல வேண்டும். அவரே கொடுப்பார். எல்லாம் பாபா வினுடையதே, ஆகையால்அவருடைய அனுமதி கேட்க வேண்டும். இதுதான் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட வாரிசின் அடையாளமாகும்.

கடந்த சீசனிலும், இந்த சீசனிலும் கூட, பாபா வாரிசுக் குழந்தைகளை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். அவருடைய இந்த விருப்பமானது நிறைவு அடையவில்லையாதலால் இனியும் கேட்டுக் கொண்டிருக்கிறார். வாரிசுக் குழந்தைகளின் இலட்சியங்களை நன்கு வரையறைத்து கூறி இருக்கிறார். ஏன் அவர் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்? நம்மில் ஏதாவது குறை காணப்படுகிறதா? நான் சேவை நிமித்தமாக செல்லும் இடங்களில் எல்லாம் சென்டரை நடத்தும் சகோதரிகள் இவ்வாறான வாரிசுத் தகுதிகளை அடைந்திருக்கிறார்களா? என்பதில் குறிப்பாக கவனம் செலுத்துவேன். ஆத்மா வின் தரத்தையும் காணவேண்டு மல்லவா? அளவில்லாத சேவையில் லயித்திருப்பவர் தங்களுடைய முயற்சியானது அதன் ஒவ்வொரு சுவடும் வெற்றி தருவதாகவும் பயனுள்ளதாகவும் அமைகின்றதா என பார்த்துக் கொள்வார்கள். தங்களுடைய முழுப் பலத்தையும் யக்ஞத்திற்காக செலவு செய்வார் கள். எல்லோரும் வாரிசுகள் ஆக அறிந்திருப்பார்கள் எனவும் சொல்ல முடியாது. வாரிசுகளாகப் பயிற்சியும் தேவைப்படுகிறது. முதலாவதாக உங்களிடத்தில் வாரிசு ஆத்மாவாக ஆகக்கூடிய உணர்வு, திறன் இல்லை என்றால் மற்றவரை எவ்வாறு வாரிசாக ஆக்க முடியும்.

**வாரிசு ஆகுபவர் எவ்வாறாக இருப்பார்?**

நான் செல்லுமிடமெல்லாம் அவ்வாறான வரைத் தேடுவேன். வாரிசாக இருப்பது என்பதன் பொருள் என்ன? வாரிசுகளின் குணங்களை ஆராயும்போது, சாத்ரக் பறவை கள் போன்று அவர்கள் காண வருவார்கள். எல்லாவற்றையும் எளிதாகவும் கிரகிக்கக் கூடியவர், புரிந்துக் கொள்ளவும் விருப்பமுள்ள வராகயிருப்பர். எவ்வளவு ஆர்வத்துடன் அவர் கற்றுக் கொள்கிறார் என்பது வாரிசுவின் அறிகுறியாகக் காணவரும். சில நேரங்களில் பொறுப்புடையவரே எல்லைக்குட்பட்ட நிலையில் இருப்பதால் அவர்கள் அளவற்ற நிலைக்குச் செல்ல முயலாததால், மற்ற முயற்சி செய்பவரை அளவற்ற நிலைக்கு எடுத்து செல்ல உற்சாகம் காட்ட வேண்டும், என்பதனில் ஆர்வமற்றவராக இருக்கின்றனர்.

வாரிசுத் தகுதி உள்ளவர் அளவற்ற நிலையை எட்டியவர்கள். அவர்கள் சிந்தனை களில் சங்கமயுகத்தின் முழு ஆஸ்தியையும் எவ்வாராயினும் அடைந்தே தீர வேண்டு மென்ற உறுதியுடன் இருப்பர். வாரிசானவர் பாபாவின் உதவியை பெற்று அவருடைய அரியணைக்கு அருகதை யுடையவராகிறார்கள். எந்தக் காரியம் செய்தாலும், தாங்கள் வாரிசு ஆனவர் களானதால், கருவியாக செயல்பட்டு, மிகுந்த வெற்றியை அடைகிறார்கள். தாதா விஷ்வகிஷோர் அவ்வாறாக இருந்தார். பாபாவினுடைய கட்டளையை தனதாக ஏற்றுக் கொண்டு வெற்றிகரமாக செய்து முடித்தார். பாபா நமக்கு மிகப்பெரிய அளவில் வாய்ப்பு களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை நாம் மறுத்தால் நம் பாக்கியத்தை நாமே பாழாக்கிக் கொள்கிறோம். பாபா கூறியதை, நான் நடத்தியே காட்டுவேன் என்ற உறுதியான நம்பிக்கை என்னில் வளர்த்துக் கொண்டேன் என்றால், அதற்கான சக்தியை எனக்கு அவர் அளித்து உதவுவார்.

வாரிசு குழந்தைகளை நாம் கண்டெடுத்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் வாரிசானவர் எவ்வாறு எண்ணுகிறார்? அளவிற்கு அப்பாற்பட்ட நிலைக்கு மிக்க அன்புடன் அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். தாதி ஜானகிஜி அவர்கள் இதற்கான வழியை காட்டும் சேவையில் எவ்வாறு முன்னேற வேண்டு மென்பதை ஆத்மாக்களுக்குச் செய்து காட்டு கிறார். நான் சகோதரிகளுக்குச் சொல்வேன் வாரிசு ஆகக்கூடியவர் நிறைய இருக்கிறார்கள், ஆனால் எந்த அளவு அவர் களுக்கு வேண்டிய ஊக்கம் நாம் கொடுக்கிறோம்?

எந்த அளவு நாம் அளவற்ற நிலைக்குச் செல்கிறோமோ, அந்த அளவு மற்றவரையும் எடுத்துச் செல்ல முடியும். முழு யக்ஞத் திற்கும், எங்கெல்லாம் தேவையோ அங்கு நம்முடைய உடல், மனம், பொருள் எல்லாம் உபயோகமாக வேண்டும். சகோதரர் ப்ரிஜ்மோகன் எடுத்துக்காட்டாக இருக்கிறார். **பாபா சொல்வார், அவர் செய்து காட்டுவார்.** அவ்வாறு **ஹான்ஜி** என்ற பாடத்தை நாம் பின்பற்ற வேண்டும்.

---

மனித குலத்திற்கு பகவானின் அன்புப் பரிசு

**பற்பல பிறவிகளாக நாம் பக்தி செய்தோம். பகவானுக்கு மலர் மாலைகள் சூட்டி மகிழ்ந்தோம். இதற்குக் கைமாறாக இப்போது பகவான் நமக்கு தெய்வீக குணங்களைப் பரிசாக அளிக்கின்றார். விலை மதிக்க முடியாத ஞான ரத்தின மாலையை நமக்கு சூட்டுகின்றார். பகவானின் இந்த அன்புப் பரிசை நாம் அணிந்து கொள்ள வேண்டும். இது நமது சௌபாக்கியத்தின் அடையாளமாகும். இதன் மூலம் நாம மேலும் பன்மடங்கு பாக்கியசாலிகளாக முடியும்.**

# கேள்வி - பதில்



**பிரம்மா குமாரிகள் வித்யாலயத்தின் ஆன்மீக விளக்கங்கள் புதுமையாக இருக்கின்றன. சாஸ்திரங்களில் எல்லாமே இருக்கும்போது இதற்கு இப்போது என்ன அவசியம்?**

**பதில்:** காலம் மாறிக் கொண்டேயிருக் கின்றது. காலத்திற்கேற்ப மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. மாறத் தான் வேண்டும். இது இயற்கை நியதி. இதனை தடுத்து நிறுத்த இயலாது. பழிக்குப் பழி என்ற கோரப்பிடியில் சிக்கியிருந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தான் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்றார் ஏசுநாதர். எதற்காக? அது காலத்தின் கட்டாயம். அது போலவே சாஸ்திரங் கள் இருப்பதும் அவைகளை மக்கள் படிப்பதும் உண்மையே. ஆனால் மூன்றாவது கண் (ஞானக் கண்) மூடிக்கிடக்கின்றதே! இப்போது இவ்வுலக நாடக அரங்கத்தில் கடைசிக் காட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதோ, விரை விலேயே வேடம் களைந்து விட்டு வீடு திரும்ப வேண்டும் என்பதோ, அடுத்து வரும் கல்பத்தின் முதல் காட்சிக்கு இப்போதே தயாராக வேண்டும் என்பதோ தெரிய வில்லையே! ஆகவே தான் புது உலகிற்கான புதுமை ஞானம் மனிதனுக்கு அவசியமாக இருக்கிறது.

**கேள்வி: புது உலகம் வருகிறது என்று எந்த ஆதாரத்தில் கூறுகின்றீர்கள்?**

**பதில்:** பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தின் ஸ்தாபகரான பிரஜாபிதா பிரம்மா புது உலகு பற்றிய திவ்ய காட்சியினைக் கண்டார். இதுபோலவே இன்னும் பல பிரம்மா குமாரிகளும் திவ்ய காட்சிகளைக் கண்டிருக்கின்றனர். மேலும் இவ்வித்யாலயக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்கும் அனை வருக்குமே இதில் உடன்பாடும் நம்பிக்கையும் உண்டு. மேலும் இன்று உலகம் அறிவியலாலும், இயற்கையாலும் பல நம்ப முடியாத அளவிற்கு பல அழிவுகளை சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது, என்பதை நாம் அனைவரும் கண்கூடாக பார்த்துக் கொண்டு தானே இருக்கின்றோம். அப்படியானால் பழைய உலகம் அழியும் போது நிச்சயமாக புது உலகம் ஸ்தாபனை ஆகும் என்பது நிதர்சனம் தானே! உண்மையை ஊரறியச் செய்வது கடமையல்லவா!

**கேள்வி: கிறித்தவர்கள் ஏசுவே உண்மையும், வழியுமாயிருக்கின்றார் என்றும் அவர் மூலமாகவே இறைவனை அடைய முடியும் என்றும் கூறு கின்றார்கள்? இதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?**

**பதில்:** கிறித்தவர்கள் இவ்வாறு கூறு கின்றனர். இது அவர்களுடைய நம்பிக்கை. உலகிலுள்ள எல்லோருமே அப்படிக் கூற வில்லை. இதை ஏற்பதும், மறுப்பதும் அவரவர் விருப்பம். உதாரணமாக இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், இந்துக்கள் வேறு நம்பிக்கை உடையவர்களாகயிருப்பது கண் கூடானது. ஒவ்வொரு மதத்தினருக்கும் பிரத்தியேகமான சாஸ்திரங்கள் உண்டு. அதைத் தான் பின்பற்றி வருகிறார்கள். இந்துக்கள் ஸ்ரீ கிருஷ்ணரைக் கடவுள் என்பர். கிறித்தவர்கள் அவரைப் பின்பற்றுவார்களா? அவர் கூறிய வற்றை ஏற்பார்களா? இல்லை. என்றாலும் எல்லோரும் அழைக்கின்ற இறைவன் எல்லோருக்கும் தந்தையாக இருக்கின்ற இறைவன் ஒருவர் தான். மத ஸ்தாபகர்கள் அனைவருக்கும் கூட தந்தை அந்த ஒருவரே தான். படைப்பவர் ஒருவர் தான். ஆனால் அவர் யார் என்பதை காலம் நிரூபிக்கும். படைப்பவர் கடவுள். ஆனால் இதைப்பற்றிய சரியான விளக்கமும் அவசியமானதாகும்.

**கேள்வி: பிரம்மா குமாரிகள் பிரம்மச்சர்ய கோட்பாட்டை முக்கியமாக வலியுறுத்துகின்றனர். எல்லோருமே இதை ஏற்று நடந்தால் உலகத்தின் கதி என்னவாகும்?**

**பதில்:** உலகத்தின் கதியை நிர்ணயிக்கும் சக்தி நம்மிடம் உள்ளதா? இதைப்புரிந்து கொள்ள வேண்டும். இதைப்பற்றி மகாத்மா காந்தியடிகளின் கருத்து என்ன? பிரம்மச்சர்யம் கடைப்பிடிப்பதன் மூலம் உலகம் முடிந்து விடும் என்றால் அதற்கு நாம் எப்படி பொறுப் பேற்க முடியும். உலகத்தின் எதிர்காலம் பற்றி அக்கறை கொள்ள நாம் கடவுளா என்ன? நாம் ஏதாவது வியாபாரமோ அல்லது வேறு தொழிலோ செய்வதாயிருந்தால் அப்போது உலகம் என்ன ஆகும் என்று யோசித்தா செய்கிறோம். யார் யாரெல்லாம் பிரம்மச்சர்யம் கடைப்பிடிக்கிறார்கள். யார் கடைப்பிடிப்பதில்லை என்பதெல்லாம் நமது வேலையில்லை. உண்மையான பிரம்மச்சாரியாக இருந்தால் நாளடைவில் அவரே புரிந்து கொள்வார். உண்மையில் பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் விரும்பத்தக்க ஒழுங்கு முறைகளும், மறுமலர்ச்சியும் உலகில் ஏற்படும். வருங்காலத்தைப்பற்றி இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பதாக இருக்கின்றது. அப்படியானால் இதைப்பற்றி பிரச்சாரம் செய்வீர்களா என்று கேட்டதற்கு ஆம். நீங்கள் பயப்படுவதைப்போல படைப்பு அழிந்து போய் விடாது. மாறாக உயர் ஒழுக்கமுள்ளதாக மாற்றம் பெறும் என்று பதிலளித்தார்.

**கேள்வி: புது உலகில் ஜனத்தொகை மிகக் குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அப்படியானால் யார் எங்கு எப்பொழுது வரவேண்டுமென்பதை தீர்மானிப்பது யார்?**

**பதில்:** இதற்கு முதலில் புது உலக பூகோளத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மனிதர் வாழப் போதுமான மண்பரப்பளவு மிகக்குறைவான தாகவே இருக்கும். புது உலகம் இன்றைய நிலையிலிருந்து மாறுபட்ட தூய்மையான உலகமாகும். இதற்குத் தகுதியுள்ள ஆத்மாக்களே அங்கு ஜன்மம் எடுக்கின்றனர். மற்றவர் சாந்தி தாமம் என்ற மேலுக அமைதி இல்லத்தில் பிறவிக்கப்பாற்பட்டிருப்பர். ஆரம்ப காலத்தில் வருபவர்கள் தூய்மை நிறைந்தவர் கள். இதற்காக இதற்கு முந்தைய பல பிறவிகளிலும் குறிப்பாக கடைசிப்பிறவியிலும் இவர்கள் எடுத்துக் கொண்டிருந்த முயற்சிகள் ஆதாரமாய் இருக்கும். பரிசுத்த தன்மையானது, முயற்சியின் அடிப்படையில் ஆன்மாவுக்கு ஆன்மா வேறுபடுவதால் புது உலக ஆரம்ப நாடகப் பாத்திரத்தை ஏற்கும் திறன் எல்லோருக் கும் இருப்பதில்லை. ஒவ்வொரு ஆத்மாவும் அதன் சக்திக்கேற்ப காரியங்களைச் செய்யும் போது தான் சிரமப்படாமல் சௌகரியமாக இருப்பதாக அனுபவம் செய்கிறது. இது ஒவ்வொரு ஆத்மாவும், அதனதன் பாத்திரத்திலேயே இயல்புடையதாக இருக்கிறது என்பதை உறுதி செய்கிறது. எனினும் படைப்பின் கதையே. உண்மை நாடகத்தின் கதையாக இருக்கின்றது. எந்த நாடக மானாலும், நடிகர்கள் அவரவர்க்கு நிச்சயிக்கப் பட்ட காட்சியில் தான் அரங்கத்தில் தோன்றுவார்கள். இது ஒரு எல்லையற்ற நாடகம்.

**கேள்வி: யோகம் செய்வதற்காக, சாத்வீக உணவையே ஏற்பது அவசியமா?**

**பதில்:** ஆம். யோகப்பயிற்சியின் போது நம்பிக்கை யூட்டவும், அதன் முழுப் பயனை அனுபவம் செய்யவும் சாத்வீக உணவு தான் பொருத்தமானதாகும். யோகத்தில் மனதின் பங்கு தான் முக்கியமானதாக இருக்கிறது. உணவிற்கும் மனதிற்கும் மிகுந்த சம்மந்த முண்டு. எப்படி அன்னமோ, அப்படி மனம் என்று சொல்லப்படுகிறது. மனம் தான் எண்ணங்கள் உற்பத்தியாகும் இடம். யோகத்தில் எண்ணங்களே முக்கிய இடம் வகிக்கிறது. ஆதலால் யோக சாதனை செய்பவர் கள், இவ்வித உணவுப் பழக்க முடையவர் களாக இருப்பது அவசியம். இதை அவரவர் சோதித்து முடிவுக்கு வரமுடியும்.



## ஜெகதாம்பாள் சரஸ்வதி

(பி.கு. கமலா, கொட்டாஞ்சேனை, ஸ்ரீலங்கா)

ஆதிதேவன் மகளாக அவதரித்த ஞான கங்கை
அவர் அரவணைப்பில் எந்நாளும் வாழ்ந்திருந்தவர்
கலைவாணி சரஸ்வதியென புகழ் பெற்றவர்
லோப, மோக விஷயங்களை வெற்றி கொண்டவர்.

சாந்தமான வாழ்வுததனை சார்ந்து நின்றவர்
சாரமற்ற உலகமதை சரியாகப் புரிந்தவர்
உலககெங்கும் ஒளியேற்ற உறுதி பூண்டவர்
பிறர் இருள் நீங்கும் வழிகாட்டும் வலிமை படைத்தவர்

ஈசனின் ஞானம்தான் பறைசாற்ற பிறப்பெடுத்தவர்
உலகசேற்று வாழ்விலிருந்து தன்னை மீட்டவர்
பிரம்மா குமாரி அவர் பிரம்ம தேவனின் மகள்
அவர் பெருமைதனைப் பறைசாற்றியவர்

வெள்ளையாடை ஒன்றை மட்டும் விரும்பியணியந்தவர்
உலக வாழ்வுதனை உதறிச் சென்றவர்
உண்மையான வாழ்வை உணர்ந்து கொண்டவர்
பகவானின் விருப்பப்படி தன் வாழ்வை அமைத்தவர்

புத்துலகம் படைத்திட நித்தம் உழைத்தவர்
உலக சேவைக்கென நிமித்தமானவர்
ஞான யோக வார்வுதனை நன்கறிந்தவர்
மனித குல மேன்மையை மிளிரச் செய்தவர்

மனம் மூலம் அனைவருக்கும் சேவை செய்தவர்
ஞானக் கலசம்தனை தலையில் ஏற்றவர்
ஞான இரத்தினங்களால் தன்னை அலங்கரித்தவர்

உலகம் போற்றும் எம் தாய் மம்மா
கண்மணிபோல் எம்மைக் காத்த தாயல்லவா?
கருணை உள்ளம் படைத்த ஈஸ்வரிய தாய்
நித்தம் உம் புகழ் பாடிப் போற்றிடுவோம் அம்மா

**ஒவ்வொருவரின் நடிப்பும் அவரவர்களின் சிறப்பு தன்மை நிறைந்தது**
**ஒவ்வொருவரின் சிறப்பும் தனிப்பட்டது மற்றும் மகான் தன்மை நிறைந்தது**



**சென்னை (அம்பத்தூர்):** கிளை நிலைய திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**சென்னை (அம்பத்தூர்):** புதிய கிளை நிலைய திறப்பு விழாவில் கேக் வெட்டி ஆரம்பிக்கும் மூத்த சகோதரிகள்



**சென்னை:** (ஹேப்பி வில்லேஜ்): இராஜயோக சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள்



**சென்னை:** (ஹேப்பி வில்லேஜ்): இராஜயோக சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள்



**சென்னை: (ஹேப்பி வில்லேஜ்):** பள்ளி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராஜயோக தியானப்பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்



**மதுரை:** காமராசர் பல்கலைக்கழகத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள துணைவேந்தர் டாக்டர். ஆ. கல்யாணி மதிவாணன் அவர்களுக்கு பி.கு. ஆஷா அவர்கள் இறை நினைவு பரிசினை வழங்குகின்றார்.




**சென்னை (இரத்தன்பஜார்):** அன்னையர் தின நிகழ்ச்சியில் வரவேற்கின்றார் பி.கு. கீதா, மேடையில் பி.கு. ஆதிலட்சுமி, திருமதி நாகமணி, கவுன்சிலர் மற்றும் பி.கு. பாண்டி அபர்ணா



**சென்னை (இரத்தன்பஜார்):** அன்னையர் தின நிகழ்ச்சி விழாவில் கலந்து கொண்ட அன்னையர்.



**சென்னை:** State Bank of India மேனேஜர்களுக்கு இராஜயோக பயிற்சிக்கு பின் உடன் பி.கு. நீலிமா



**திருநெல்வேலி:** குழந்தை கே. விசாலினி Age 11, IQ level of 225 (உலகில் முதன்மையானவர்) இராஜயோக அறிமுகம் கொடுத்து இறை நினைவு பரிசினை வழங்குகின்றார் மூத்த சகோதரர் பி.கு. ஆவுடையப்பன்



**சிவகங்கை:** குமாரபட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் இராஜயோக தியான அனுபவம் செய்வித்தார் பி.கு. விமலா மேலும் மாணவ மாணவிகள்



**திண்டுக்கல்:** ஐக்கிய கிறிஸ்துவ Rev. Fr. கூட்டமைப்பு கிளாடியா பாரிகா சர்வ தேச பிரதிநிதி பி.கு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்.



**சிவகங்கை:** சீதாலக்ஷிமி நகர் கீதாபாடசாலையில் பாபா கொடியேற்றிய பின் பி.கு. விமலா உடன் பிரம்மா குமார் சகோதர சகோதரிகள்



**கிருஷ்ணகிரி:** பத்து வருடங்களுக்கு மேற்பட்ட இறை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்து இருந்த பாராட்டு விழா நிகழ்ச்சி



**சென்னை (முகப்பேர்):** பாடியில் புதிய கீதா பாடசாலை திறப்பு விழாவில் பி.கு. கலாவதிஜி அவர்கள் வகுப்பு நிகழ்த்துகின்றார்.



**திருவண்ணாமலை:** மகளிர் தின விழாவினை முன்னிட்டு ஆன்மீக சேவையில் சிறந்த சாதனையாளர் விருதை மாவட்ட கண்காணிப்பாளர் திருமதி சாமூண்டீஸ்வரி அவர்கள் பி.கு. உமா அவர்களுக்கு வழங்குகிறார். உடன் மாநில எக்ஸ்னோரா தலைவர் இந்திரராஜன் சக்தி எக்ஸ்னோரா தலைவி லதா பிரபு ஆகியோர்.




**செங்கல்பட்டு:** மாநில ஊரக வளர்ச்சி நிறுவன அலுவலர்களுக்கு இராஜயோக தியானம் பற்றி விளக்கம் அளிக்கின்றார் பி.கு. மல்லிகா, மறைமலை நகர், உடன் பி.கு. கௌதம்



**செங்கல்பட்டு:** சிவஜெயந்தி கொடியினை ஏற்றுபவர்கள் பி.கு. நீலிமா, மூத்த சகோதரர் பி.கு. இராமகிருஷ்ணன் மற்றும் பிரம்மாகுமார் குமாரிகள்




**திருவண்ணாமலை:** ஆறு மாவட்டத்தைச் சார்ந்த ஜுனியர் ரெட் கிராஸ் மாணவ மாணவியருக்கு இராஜயோக பயிற்சி அளிக்கிறார் பி.கு. கீதா உடன் பி.கு. பானுப்பிரியா



**திருவண்ணாமலை:** பங்குபெற்ற ஜுனியர் ரெட் கிராஸ் மாணவ மாணவியர்கள்.




**சிவகங்கை:** பாலர் பாதுகாப்பு விடுதியில் சிவஜெயந்தி கொடியினை பி.கு. விமலா அவர்கள் ஏற்றுகின்றார்கள் உடன் மதிப்பியல் தலைவர் ஸ்ரீ பகீரதன் நாச்சியப்பன் மற்றும் விடுதியின் மாணவ மாணவியர்




**வேலூர்:** சிவஜெயந்திவிழாவில் உலக அமைதிப் பேரணியை வேலூர் மாநகர மேயர் திருமதி கார்த்திகாயினி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.



**சென்னை:** மே 31, புகையிலை ஒழிப்பு தினமன்று சைதாப்பேட்டை ரயில்வே நிலையத்தில் நடைபெற்ற புகையிலை ஒழிப்பு பற்றிய கண்காட்சியினை துவக்கி வைப்பவர் RPF சந்திசேகரர் உடன் பி.கு. தேவி



**சென்னை (அம்பத்தூர்):** மே 31, புகையிலை ஒழிப்பு தினமன்று **அம்பத்தூர்** ரயில்வே நிலையத்தில் புகையிலை ஒழிப்பு பற்றிய கண்காட்சியினை ஆர்வமுடன் கேட்கும் பொது மக்கள்




சென்னை (நுங்கம்பாக்கம்) அமர்நாத் பனி லிங்க தரிசன காட்சியினை காண ஆர்வமுடன் வரிசையில் காத்து இருக்கும் பக்தர்கள்



மவுண்ட் அபு: மவுண்ட் அபுவில் நடைபெற்ற Media Conference ல் சென்னையிலிருந்து பங்கு பெற்ற திருமதி லலிதா, திரு விஜயபாபு, திரு சந்திரசேகர் மற்றும் திருமதி உதயராணி ஆகியோருடன் பி.கு. இரஞ்னி

# உணவு, உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் உயர் சிந்தனை

நன்றி - ஞானாமிருதம் (தமிழாக்கம், பி.கு. பத்மா, சாந்திதாம்)



உணவு-ஆரோக்கியம்-ஒழுக்கம்-உயர் சிந்தனை

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோயிலிருந்து விடுபடவும் மருந்துகளின் கூடவே நான்கு நியமங்கள் பற்றி சிந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த நான்கு நியமங்கள் - **உணவு, உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் உயர் சிந்தனை** ஆகியன.

தற்காலத்தில், மருத்துவ மனைகள் அல்லது மருத்துவர்கள் தான் எந்த ஒரு மனிதனையோ அல்லது மக்களையோ ஆரோக்கியமாக வைப்பதற்கு பொறுப்பாளர் அல்லது அவர்கள் யாரையும் நோயற்றவர்களாக ஆக்க முடியும் என்ற அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால் மனிதன் தனிப்பட்ட முறையிலும், சமுதாயம், கூட்டான முறையிலும் பொறுப்பானவர்கள் என்பதை உணர வேண்டும். ஏனெனில் ஆரோக்கியத்திற்காக மருத்துவ மனைகளையும் மருத்துவர்களின் உதவியை யும் நாடுவது போதுமானதல்ல. அவசரமான அவசியத்திற்கு மருத்துவர்களின் உதவி தேவை என்பதை மறுக்க முடியாது. எனினும் நோய் மற்றும் ஆரோக்கியம் இரண்டிற்கும் தன்னைப் பொறுப்பாளன் என்று தீர்மானிப்பது தான் உடல் ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு எடுத்து வைக்கும் சரியான முதல் அடியாகும். உணவு, உடல், ஆரோக்கியம் ஒழுக்கம் மற்றும் உயர்சிந்தனை இந்த நான்கும் ஆரோக்கியத் திற்கு ஆதாரத் தூண்களாகும்.

## உணவின் மகிமை எல்லையற்றது:

விளைவித்தல், அறுவடை செய்தல், வாங்குதல், கொடுத்தல், சேமித்து வைத்தல், உணவு தயாரிக்கும் முறை, தயாரிப்பவர், பரிமாறும் நயம், சாப்பிடும் இடம், சாப்பிடும் முறை, உணவின் அளவு சமைத்த பதார்த்தங் களை தட்டுகளில் வைக்கும் விதம், உடன் உணவு அருந்துபவரின் சுபாவம், இரு வேளை போஜனங்களுக்கு இடையேயான இடைவேளை போன்ற அனைத்து விஷயங் களின் விதிமுறைகளின்படி உணவின் மகத்துவம் அமைகிறது. உணவுக்கு, தாக்கத்தை ஏற்படுத்தும் இத்தனை விஷயங் களில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கவனமாக இருப்பதும், பரமாத்மா வின் நினைவில் இருந்து உணவுடன் சம்பந்தப் பட்ட காரியங்களைச் செய்தோமானால் அந்த உணவினால் நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது.

## உடல் ஆரோக்கியம் உலகம் அறிந்தது:

ஆத்மா, சரீரம் என்ற உடையைத் தனது பயன்பாட்டிற்காகவே பெற்றிருக்கிறது. உடலில் ஆரோக்கியக் குறைவு ஏற்படும் போது, இதயம் மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படுகின்றன. சோம்பேறித்தனம் என்ற பயங்கர வியாதியும் கூட மனிதனை இறுக்குகிறது. பிறகு அதனிடமிருந்து யாரும் நம்மைக் காப்பாற்ற முடியாது. குழந்தைகள் வயதானவர்கள், இளைஞர்கள், பெண்கள், காலம், காலநிலை, மனநிலை இவைகளைக் கருத்திற்கொண்டு உற்சாகத்துடன், சரியான அளவில் உழைக்க வேண்டும். குறைவான உழைப்பும் கூட நிறைய நேரங்களுக்கு ஆதார மாகிறது. தற்காலத்தில் டி.வி, ஆட்டோ மொபைல், மொபைல் போன்ற புதிய கருவி களின் பயன்பாடு தனது சனி கிரஹப் பார்வை மனிதர்கள் மீது நிறைய பதிந்திருக்கிறது. ஆரோக்கியம் பற்றிய உணர்வு

மனிதர்களுக்கு உண்டு. ஆனால் இவைகளிட மிருந்து பாதுகாப் பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். இந்த வேலைக்காரர்களுக்கு (சாதனங்கள்) நாம் அடிமையாகக் கூடாது.

### ஒழுக்கக் குறைவும் கூட அநேக நோய்களுக்கு ஆதாரம் :

பொறாமை, வெறுப்பு, பகைமை, பிறர் குறை காண்பது, பழி சுமத்துவது போன்ற ஒழுக்கக் கேடுகள், மனதில் அழிவிற்கான உணர்வுகள் என்ற கடலில் மூழ்கடிக்கிறது. இதனால் உடலின் செல்கள் அழிகின்றன. அனைவரும் ஒரு பரமாத்மாவின் குழந்தைகள். அதனால் அன்பு மற்றும் சகோரத்துவ உணர்வுடன் நடப்பதுதான் முறையானது. இம்மாதிரியான நல்லொழுக்கமுடையவர்கள் தனக்குத் தானே நன்மை செய்து கொள்பவர் களாக இருக்கிறார்கள். இந்த ஒழுக்கத்தை பரமாத்மாவாகிய தந்தை குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார். இதன் மூலம் சிரேஷ்டமான சத்யுகம் செல்வதற்குத் தகுதியானவர் ஆவோம். ஒழுக்கத்தில் கேடு இருக்குமானால் கடைசி மூச்சு உள்ள வரையிலும் கூட ஆரோக்கியமாக இருக்க முடியாது.

### அனைத்திற்கும் ஆதாரம் எண்ணங்கள்

ஆத்மா தன்னை மறந்து விட்டது. அதனால் துக்கத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருக் கிறது. எண்ணங்களை சரி செய்வதற்கேற்ப மற்ற அனைத்து விஸ்தாரமும் கூட சரியாகி விடுகின்றன. நான் அழிவற்ற ஆத்மாவாக இருக்கிறேன் எனும் போது மற்ற அனைவரும் அழிவற்ற ஆத்மாக்களே ! எனவே அற்பமான (தாழ்ந்த) எண்ணம் அனைத்தும் மாறும். அதனால் பாபா, கண்ணோட்டத்தை சரி செய்வதற்கான ஸ்ரீமத் அடிக்கடி கொடுத்துக் கொண்டே இருக்கிறார்.

## நினைவு அஞ்சலி



பிரம்மா குமாரி முத்துலட்சுமி ஊட்டி கிளை நிலையத்தின் பொறுப்பாளராய் சேவை செய்து வந்த அவர், 1974-ல் பாபாவின் ஞானத்திற்கு வந்தார். 1992-ல் பாபாவின் பணியில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டவர். நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் சுமார் 1500 கிராமங்கள், டீ எஸ்டேட்கள், சிறு நகரங்களில் சேவைக்கு நிமித்தமாக இருந்தவர். சேவையில் ஆர்வத்துடனும், பாபா மீது முழு நிச்சய புத்தியுடனும் அனைவரது ஒத்துழைப்பையும், சுபபாவனையையும் பெறுவதில் ஆர்வத்துடனும் இருந்தது அவருடைய சிறப்பு இயல்புகளாகும்.

கடந்த 6 மாதங்களாக உணவு குழாயில் புற்று நோய் காரணமாக சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். லௌகீக சரீரத்தின் கணக்கை முடித்துக் கொண்டு தனது 62வது வயதில் கடந்த ஜுன் 3ம் தேதி காலை 6.20 மணிக்கு இப்பூடலை விட்டு பாபாவின் மடி சேர்ந்தார். மறுநாள் 4ம் தேதி காலை 11 மணிக்கு ஈஸ்வரிய சகோதர சகோதரிகளின் முன்னிலையில் அவரது இறுதி சடங்குகள் நடந்தேறின.

அனைவரும் அவரது ஆத்ம சாந்திக்காக யோக தானம் செய்வோமாக!

- ஆசிரியர், சங்கமயுகம்

# ஆற்றல் சக்திகள் - செயல்படும் முறை

பி.கு. துர்காபிரசாத், சாந்திவன், அபுமலை

**நுண்ணிய விஷயங்களை ஆழ்ந்துணர்ந்து உண்மையற்றவைகளை உண்மையிலிருந்து வேறுபடுத்தும் பகுத்தறியும் திறன் (The Power of discrimination)**

உண்மை எது, உண்மை அல்லாதது எது என்பதை உள் மனக்கண்ணால் (மூன்றாவது கண்ணால்) கண்டறியம் திறமை. இன்று அசலான வைரங்களும் செயற்கை வைரங் களும் தயாராகின்றன. செயற்கை வைர கற்களும் உண்மையானவற்றைப்போல் பிரகாசிக்கக்கூடியது. வைரக்கல் வல்லுனரே அதன் குறைகளையும், வித்தியாசத்தைதயும் காண முடியும். மற்றவர் அதன் குறைகளை காண முடியாது. அதைப்போலவே நம் வாழ்க்கையிலும் நல்லது, தவறானது ஆகிய வற்றின் பாகுபாடுகளை, இடையேயான மற்ற மாறுபாடுகள் ஆகியவற்றை அறிய நமக்கு தனித்திறமை மேலும், அனுபவம் தேவைப் படுகிறது. ஆன்மீகப் பார்வையானது ஒரு வைர வியாபாரியின் பார்வையைப் போன்றது. மனித வாழ்க்கையில், அதன் செயல் முறையில் வழங்கும் அடிப்படையான ஆன்மீக மற்றும் உலகியல் ரீதியான கோட்பாடுகள், கொள்கைள், சட்டங்கள் ஆகியவற்றின் அறிவை நன்கு அறியும் போதுதான் உண்மை எது என்பது அறியமுடியும். ஆழ்ந்து உணரக்கூடிய ஞானத்தை, நாம் நன்கு அறிந்தப் பின்னரே பார்வையானது சரியான முறையில் திரும்பப்பெற்று பகுத்தறியும் திறமை அடையப் பெறுகிறோம்.

அப்பொழுது தான் நம்மை ஏமாற்றும் தன்மையுடைய வெளிப்படையான, மேலான அழகு, உண்மை எனத் தோன்றும் பொய் ஆகியவைகளை அறிந்துக் கொள்ள முடியும். அப்பொழுது தான் நம்முடைய செயல் நல்ல பலன் அளிக்கக் கூடியதாகவும், எடுத்துக் கொண்ட நேரம் மற்றும் செய்யும் செயலும் மதிப்புடையதாய் பலன் பெறக்கூடியதாகி, சம அளவில் இருக்கும். அப்பொழுது தான் குறுகிய காலத்து மதிப்புடையனவைக்கும், நிலையான பலனை கொடுக்கக்கூடிய (ஆன்மீகத்துக்கும்) உள்ள வேறுபாட்டை அறிந்து பிரித்து காண முடியும். நம் உள்ளடங்கிய பகுத்தறியும் திறனை வளர்த்திக் கொள்ளாமல் செயலில் வந்தோமேயானால் பல தவறுகளுக்கிடையே முன்னேற்றத்தை அடையாமல் தவிர்க்க வேண்டி வரும்.

வல்லுரானவர் தாங்கள் செல்லும் வழியை நன்கு உணர்ந்து செய்த தவறை மீணடும் செய்ய மாட்டார்கள்.

**உள் உணர்வுகளால் அல்லது வெளி சூழ் நிலைகளாலும் தோன்றும் சவால்கள், சோதனைகள், தடைகள் எதிர்கொண்டு தீர்வு காணும் திறமை (The Power to face)**

ஆன்மீக யாத்திரை யானது உண்மை, பொய் ஆகியவற்றின் வித்தியாசங்களை நன்கு அறிந்து நம் வீடு திரும்பும் யாத்திரையாகும். இவ்வாறு அறிந்த விதத்தில் திரும்பும் போது வழியில் பலவிதமான சவால்களும், சோதனை களும் எதிர்கொள்ள வேண்டிவரும். மூலமான பகவானின் ஞானத்தினாலும் மற்றும் ஆன்மீக சக்திகளாலும் நாம் நிறைவு அடைந்ததால், இடையே வரும் தடைகளை உங்களால் எதிர் கொண்டு வெற்றிக் கொள்ள முடிகிறது. இவைகளையே சரித்திரங்களில் மகாத்மாக்கள், மக்களிடையே நிலவிய மூட நம்பிக்கைகள், தவறான எண்ணங்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி வெற்றிக் கொண்டு, அவர்களை முன்னேற்ற பாதையில் எடுத்துச் சென்றது பல வித காட்சிகளாக நமக்கு சரித்திரத்தில்

காட்டப்படுகிறது. பக்தி மார்க்கத்திலும், பல அஸ்திரங்களால் அலங்கரிப்பட்டு தேவதை களின் காட்சிகள் காட்டப்படுகின்றது. இது அவர்கள் பகவானின் ஞானம் கிடைத்து, விகாரத்தின் மேல் வெற்றிக் கொண்டதை குறிக்கிறது.

யோகத்தின் மூலம் நாம் ஆழமாகச் சென்று மீண்டும் அறிந்துக் கொள்ள முடிகிறது. இதன் வழியாக இதுவரை ஏற்படுத்திக் கொண்டப்பழக்கங்கள், தவறான நம்பிக்கைகள் ஆகியவற்றையும், அறிந்து மேலும் உங்கள் தனிச் சிறப்புகளையும் அறிந்துக் கொள்ள முடிகிறது. உள்ளிருந்தும், வெளி உலகத்திலி ருந்தும் விளையக்கூடிய தடங்கல்களை அறிந்து, நல்லது, தவறானது ஆகியவற்றின் பாகுபாடுகளையும் அறிநது, யோக சக்தியின் மூலம் எதிர்கொள்ள முடிகிறது. உங்களாலேயே உண்டாகக்கூடிய தடங்கலானது தவறாக புரிந்து அல்லது நம்பிய பழைய பழக்க வழக்கங்களால் உங்களில் ஏற்படுத்திக் கொண்ட செயலாற்றும் முறைகளாகும். வெளி உலகத்தினால் விளையக் கூடியவை, உங்கள் மாற்றத்தை விரும்பாதவர் கள், பழைய நிலையிலேயே உங்களை இருத்திட பல தடைகள் உண்டாக் கலாம். நேற்று வரை உங்களிடத்தில் வெறுப்பு அல்லது பயம் உண்டாக்கியவரை, நீங்கள் எதிர் கொள்ளும் போதும் சோதனைகள் வரலாம். மாறுபட்ட நிலையில் இப்பொழுதும் பழைய உணர்ச்சிகள், காட்சிகள் உங்களிடத்தில் குறுக்கே வெளிப்படலாம். நீங்கள் அவற்றை எதிர்கொள்ளும் திறமையை சோதிக்க, தவறுகள் அல்லது பயம் இடையே வரலாம். பழையன வைக்காக, உங்களுக்குள் நீங்கள் மன்னிப்பக் கொடுத்துக் கொண்ட மேலே முன்னேறிச் செல்லுங்கள்.

வீடுச் செல்லும் பயணத்தில் ஒவ்வொரு வினாடியும் நீங்கள் சோதனைகள், தடைகள் எதிர்கொள்ள வேண்டிவரும். மாஸ்டர் சர்வ சக்திவான் என கருதுபவர், இவற்றை எதிர்கொண்டு முன்னேறுபவர் ஆவர். உண்மையில் இவை மேலே உயர்த்திக் கொள்ள உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு களாகும். நீங்கள் மட்டும் வளர்வதல்ல, உங்களைக் கண்டு மற்றவரும் வளர்வார்கள். தோல்வி என்பது நம் வழியில் இல்லை. நமக்கு கிடைக்கக்கூடிய அறிவிப்புகளேயாகும். **(feedback)** குழப்பம், மாற்றம் இவை ஒன்றோடு ஒன்று உடன் செல்லும் பயணிகளாவர். அதிகாரி ஆத்மாக்களுடைய மந்திரமானது தடைகள், தடங்கல் ஆகியவற்றை எதிர் கொள்ளுங்கள். இப்பொழுதே இந்த வினாடியே! ஏனென்றால் தாமதம் என்பது நட்டத்தில் தான் விளையும்.

**நம்முடைய கவனம், நேரம், அனுபவம், அறிவு மற்றவரின் சேவைக்காக கொடுக்கும் ஒத்துழைக்கும் திறன்**

ஒத்துழைப்பு என்றால் நம்மை சார்ந்து இருப்பவருக்கு உதவுவது மட்டும் அல்ல. இதுவும் முக்கியமானதேயாகும். ஆனால் நம்முடைய உளமார்ந்த நோக்கம், எண்ணம், உணர்வு, பார்வை, ஆகிய எல்லா திறன் களுடன் உதவும் அவ்வாறான உதவி உண்மையான ஒத்துழைப்பை எடுத்துரைக்கும்.

ஒருவருடைய குறை காணாமல் அவர் கொண்ட நிறையையே காண்பது அவருக்கு நாம் கொடுக்கும் ஒத்துழைப்பு ஆகும்.

மனதில் ஒருவருடைய வெற்றிக்காக சக்திவாய்ந்த நல்ல எண்ணங்களுடன் சூட்சும மான சுப பாவனைகள் வெளிப்படுத்து வதும், மிகவும் காண்பதற்கு அறிதான விலை மதிப்புக்குரிய ஒத்துழைப்பும் சேவையும் ஆகும்.

சிநேகிதனாகட்டும், பகைவன் ஆகட்டும், அவர்கள் வீழ்ந்திருக்கும் போது, பரந்த மனப்பான்மைக் கொண்டு உதவக்கூடிய தாராளமான நல் விருப்பங்களை தெரியப் படுத்துவது தன்னலமற்ற ஒத்துழைப்பாகும்.

எதிர்நோக்கிவரும் எவ்வாறான பேரிழப்புகளிடையேயும் நிலையான, ஆக்கப்பூர்வமான மன நோக்கத்துடன் உற்சாகம் கொடுத்து உதவுவது, உயர்விக்கும் ஒத்துழைப்பாகும்.

ஒருவரை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வது, உயர்மதிப்புக் கொடுப்பது என்பது அவருடையப் பயணத்துடன் ஒத்துழைத்து அவருக்கு நம்பிக்கை எனும் ஊக்கத்தை கொடுப்பதாகும்.



## நாம் பாரதத்தின் நாற்றுகள்

**பி.கு. உதய குமார், சேலம்**

அவகுணங்கள் இருக்குமெனில் அமைதிபெற இயலாது
அவை நம்மை அசுரனாக்கி அதர்மத்தை செய்ய வைக்கும்
அவகுணங்கள் விடுவதற்கும் அதிர்ஷ்டத்தை எடுப்பதற்கும்
சிவன் ஞான யோகமேதான் சிரேஷ்டத்தை உருவாக்கும்

அதற்கான சங்கமம் தான் அனைவருக்கும் கிடைத்துள்ளது
மதம், மொழி பேதமின்றி மனிதநேய உணர்வு கொண்டு
முதல், இடை, கடை எனும் முழு ஞானம் கற்றுயர்வோம்!
உதவிசெய்ய தந்தையுண்டு உலக மாற்றம் செய்வதற்கே!

தன்னைஓர் ஆத்மாவாய் சரீரமொரு கருவியாய்
என்னவெல்லாம் நடக்கிறதோ எல்லாமே நாடகமாய்
நின்றுணரும் ஸ்திதிமூலம் நிராகார் பரமாத்மாவின்
அன்பு மற்றும் உதவியினை அனுபவம் செய்திடலாம்

சகயோகம் சகஜயோகம் சங்கமத்தின் ராஜயோகம்
பகவானே கற்பிக்க பாலனையும் அவர்கொடுக்க
அகம் புத்தி சுவாலாமுகி யோகத்தில் நாமிருக்க
சுகம் சாந்தி புதுவுலகில் சுயமாற்றம் இவ்வுலகில்

இல்லற மார்க்கத்தில் இருந்தாலும் எண்ணத்தால்,
சொல், செயலால் தூய்மையும் சமநிலையும் காண்பதினால்
நல்லதோர் பாரதத்தின் நாற்றுகள் நாம் நடப்படுவோம்
செல்லரித்த காகிதமாய் சிதைந்துவிடும் கலியுகமே!

### ஆத்மாவுக்கான அறிவுரை என்ன?

**ஆத்மாக்களே! நீங்கள் உங்கள் சரீரத்தில் இரு புருவ மத்தியில் அகால் தக்த் எனும் சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள் அல்லது பாபாவின் மனம் எனும் சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள் அல்லது அதீந்திரிய சுகம் எனும் ஊஞ்சலில் அனுபவம் செய்து கொண்டிருங்கள் ஆனால் தேகாபிமான சேற்றில் உங்கள் புத்தியின் கால் பதிந்து விடாமல் பத்திரமாக இருங்கள்.**

# எனது கேள்வியும் - இறைவனின் பதிலும்

பி.கு. செல்வநாதன், அண்ணாநகர், சென்னை



**கேள்வி: அறிவியலும், வேத புராணங்களும், இச்சிருஷ்டி பலகோடி வருடங்கள் பழமையானது என கூறிவருவது தவறா?**

**பதில்:** குழந்தையே! உன்னுடைய சந்தேகம் நியாயமானவையே. ஆனால் உண்மை என்னவெனில் இன்றைய அறிவியல் எல்லைக்குட்பட்டது. எல்லைக்கப்பாற்பட்ட இந்த படைப்பினை நீங்கள் எல்லைக்குட்பட்ட ஸ்துல தத்துவங்களின் உதவிகளைக் கொண்டு புரிந்து கொள்ள முயற்சிக்கின்றீர்கள். ஆனால் சிருஷ்டி அதற்கும் அப்பாற்பட்டது, சூட்சும மானது, ஞானக் கண் எனும் ஆத்மா மூலம் உணர வேண்டிய ஒரு விஷயமாகும்.

2012ல் இன்றைய உலகத்தின் மக்கள் தொகை சுமார் 700 கோடிக்கும் மேலாகும். அறிவியல் புள்ளிவிவரப்படி இம்மக்கள் தொகை அடுத்த 50 ஆண்டுகளில் 1250 கோடியாக அதிகரிக்கும் என்பது கணிப்பு. அப்படியானால் இவ்வுலகம் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடருமானால் மக்கள் தொகை பெருக்கமும், இயற்கை சீரழிவும் அந்த அளவு அதிகரிக்கும் என யூகிக்க முடிகிறதா? இதை சந்திக்கும் ஆற்றல் உங்களிடத்தில் உள்ளதா என சிந்தியுங்கள்!

அறிவியல் என்பது மனிதன் இவ்வுலக படைப்பின் இரகசியங்களை புரிந்து கொள்வதற்காக ஏற்பட்ட ஒரு வழிமுறை. இது மிகவும் அவசியமே. ஆனால் ஸ்தூல ஞானத்துடன் ஆன்மீக ஞானமும் இருந்தால் மட்டுமே இப்படைப்பின் இரகசியத்தை முழுமையாக உணர முடியும். மனித வாழ்வின் அடிப்படை தேவையான சாந்தி, சுகம், அன்பு, ஆனந்தம் போன்றவை சூட்சுமமான உணர்வுகள் இவற்றை ஸ்தூல விஷயங்கள் மூலம் கட்டுப்படுத்த முனைகிறீர்கள். ஆனால் அது இயலாத காரியம்.

இன்றைய ஆன்மீகம் மற்றும் ஸ்தூல அறிவியலானது இணைந்து செயல்பட்ட காலமாகிய சத்யுகம் திரேதாயுகத்தில் இன்றைய உலகின் கண்டுபிடிப்புகளை விட சிரேஷ்டமான கண்டுபிடிப்புகள் இருந்ததற்கு ஆதாரம் உங்களுடைய இதிகாச புராணங்களிலேயே கூறப்பட்டுள்ளது. நினைவில் கொள்வீர்களாயின் இராமாயணத்தில் புஷ்ப விமானம் பற்றி கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் அணு ஆயுதங்கள் போர் முறைப்பற்றி கூறப் பட்டுள்ளது.

துவாபரயுகத்தில் எழுதப்பட்ட இந்த இதிகாச புராணங்கள் அவர்கள் முன்னோர்கள் வாழ்க்கை முறையில் இவை பயன்படுத்திய தாக அவர்களுடைய கற்பனைக்கு எட்டிய விஷயமாக இருந்துள்ளது. ஆம் உண்மை இவ்வுலகம் சத்யுகமாக இருக்கும்போது அங்கு மிக முக்கியமான போக்குவரத்து சாதனம் விமானமேயாகும். மேலும் அணு சக்தியும் மிகவும் சரியான முறையில் கையாளப்பட்டது. இன்றைய அறிவியலின் குறைபாடுகள் நீங்கிய பரிபூர்ண சுகத்தை கொடுக்கும் அறிவியலும், தொழில் நுட்பமும் அங்கு செயல்பட்டு வந்துள்ளது. அங்கு விபத்துக்கள் ஏற்பட்ட தில்லை, அகால மரணமோ, யுத்தங்களோ நோய் நொடிகளோ இல்லாத ஆன்மீக கண்ணோட்டத்தோடு கூடிய குறைபாடற்ற விஞ்ஞானம் செயல்பட்ட காலம் அது.

நீங்கள் எழுதிய சரித்திரம், என்ன கூறுகிறது எனில் இவ்வுலகில் முதலில் செழிப்பான, வளமான தெய்வீக குணங்களும், பண்புகளும் நிறைந்த மன்னராட்சி நடந்துள்ளது பின் குறுநில மன்னர்கள் பின் ஜமீன்தார்கள் ஆட்சி நடைபெற்றது. இப்பொழுது மக்களே மக்களை

ஆளும் ஆட்சி நடைபெறுகிறது. மக்கள் குறைகளே இல்லாமல் வாழ வேண்டும் எனும் எண்ணத்தில் கையேந்தி வந்தவருக்கு எல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல்களின் வாழ்க்கையை எழுதியிருக்கிறீர்கள். அந்த அளவுக்கு அரசாங்கம் செழிப்பாக இருந்தது. இதனுடைய அடையாளம் இன்னும் கோவில்களில் தேவதைகளை செல்வ செழிப்பு நிறைந்தவர்களாகவே காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய நிலையோ மக்களிடம் பெறப்பட்ட வரிப்பணத்தால் அரசாங்கத்தை நடத்த வேண்டிய நிலையுள்ளது. இவற்றை நீங்கள் சிறந்த முன்னேற்றம் என கூறிக்கொள்ளலாமா?

தங்கமும், வைரமும் நிறைந்த கீரிடங்களை அணிந்த ராஜாக்கள் எங்கே? உயிரைக்காக்க தலை கவசம் கூட அணிய முடியாத இன்றைய மனிதர்களின் நிலை எங்கே?

பாலாறும் தேனாறும் ஓடியதாக கூறப்பட்டுள்ள காலம் எங்கே? தாகம் தீர்க்கும் குடி நீரும் தரமற்றதாக இருக்கும் இன்றைய உலகம் எங்கே?

இரும்பும், பிளாஸ்டிக்கும் நிறைந்துவிட்ட உங்கள் வாழ்க்கை தங்கமாளிகை கட்டி வாழ்ந்தவர்கள் வாழ்வு கற்பனையானது என கூறும்படியாகி விட்டது.

ஆதலால் ஒரு உண்மையை உணர்வீர்கள். கொடுத்து கொடுத்து வாழ்ந்த நீங்கள் இன்று மற்றவரிடம் ஏதாவது கிடைக்குமா என ஏங்கும் மன நிலையை அடைந்துள்ளீர்கள். நீங்கள் மனித வாழ்வின் உயர்வை நோக்கி செல்வதற்கு பதில் தாழ்ந்து கொண்டு வருகிறீர்கள் எனும் உண்மையை உணர வேண்டியது மிக அவசியமாகும்.

செல்வத்திலும், உடல் ஆரோக்கியத்திலும் குண நலன்களிலும், பண்புகளிலும் ஆன்மீக சக்திகளிலும் இன்றைய மனிதன் தன்னுடைய கடைசி நிலையில் இறங்கி நிற்பது நிதர்சன உண்மையாகும். இதை உணர்த்தி மீண்டும் உங்களை உயர்ந்த சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கு வழி காண்பிப்பதே இறைவனாகிய என்னுடைய செயலாகும். இதையே பிரம்மா மூலம் ஸ்தாபனை, விஷ்ணு மூலம் பாலனை, மற்றும் சங்கர் மூலம் தீயவை அனைத்தும் அழிக்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது. ஆனால் மூன்று மூர்த்திகள் மூலம் இக்காரியத்தை செய்பவன் செய்விப்பவன் இறைவனாகிய பரம்பிதா பரமாத்மாவாகிய நான் ஒருவனே!

**கேள்வி: இறைவனாகிய உங்களை நாங்கள் இதுவரை அடையாததில், எங்கள் தவறு எது?**

**பதில்:** முதலாவதாக உடலற்ற என்னை உடலுடைய உருவமாக கருதி வழிபட்டதாகும். எனக்கு ஸ்துல உடலோ அல்லது சூட்சும உடலோ கிடையாது. அவ்வாறு உடல் இருப்பின் அதற்காக நானும் செயல்கள் செய்ய வேண்டியிருக்கும். அதனால் நானும் கர்மவிதிக்கு ஆட்பட்டு இறப்பு பிறப்பு சக்கரத்தில் வரவேண்டியிருக்கும். ஆனால் கர்ம பந்தனங்களுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளாக நான் இருக்கின்றேன். நானும் உங்களைப் போன்று ஒரு ஒளி சக்தியான ஆத்மா. ஆனால் நான் பரம் ஆத்மா, சதா தூய்மையானவன், ஞானக்கடல், சுகம், சாந்தி, அன்பு, ஆனந்தம் ஆகிவற்றின் கடலாக இருக்கின்றேன். சர்வ சக்திவானாக இருக்கின்றேன்.

நான் இருப்பது பரந்தாமம் எனும் ஆத்ம லோகம். நீங்களும் என்னுடன் அங்கு தான் இருந்தீர்கள் ஆனால் உங்கள் வாழ்க்கை பாகத்தை நடிக்க ஒவ்வொரு ஆத்மாவும் அவரவர் காலத்தில் ஆத்ம லோகத்தை விட்டு இப்பூமிக்கு வந்து விட்டீர்கள். ஆதியில் தூய்மையாக, நல் நெறியுடன் சுகமாக வாழ்ந்த நீங்கள் பின் பல பிறவிகள் தேகத்தை எடுத்து வாழ்ந்து வந்ததால் உங்கள் சிந்தனையில் ஏற்பட்ட **தேக அபிமானத்தால்** பாவங்களை செய்து கிழிறங்கி வந்து விட்டீர்கள். இப்போது உங்களை மீண்டும் தூய்மைப் படுத்தி முக்திக்கும் ஜீவன் முக்தியும் வழி காட்டுவதற்காக நான் இப்புவியில் அவதரித்துள்ளேன்.

# சுமையை சுகமாக்குவோம்

பி.கு. செண்பகராஜ், மதுரை



உலக நடகத்தில் மனித நிலை பலதரப்பட்ட வகைகளில், சூழ்நிலைகளில் இருந்தாலும், பலவிதமான பாகங்களை நாம் இந்த உலக மேடையில் நடித்தாலும், பல வேற்றுமைகள் நம்மிடையே இருந்தாலும் நம் அனைவரின் தேடுதல் அமைதி மற்றும் சுகமான வாழ்க்கையை நோக்கித்தான் லட்சிய மாகக் கொண்டுள்ளது.

எங்கு இருந்தாலும், எதைச் செய்தாலும் அமைதி, திருப்தி மற்றும் பாதுகாப்பை அனுபவம் செய்யும் மனநிலை தான் சுகமான வாழ்க்கை. ஆனாலும் வாழ்க்கையில் சுமை யானது எங்கிருந்து வருகின்றது? மனச் சுமை என்பதால் அது மனதிலிருந்து வருகின்றதா? அல்லது நமது உறவினர் அல்லது வேறு பிறரால் வருகின்றதா? இது சிந்தனைக்குரிய விஷயமாகும்.

உண்மையில் நாம் அனைவரும் அமைதி யான மனநிலைக்கு சொந்தக்காரர்களே! சுமைக்குக் காரணமே, நமது இயல்பு நிலைக்கு எதிராக நாமே நம்மை நடத்துவது தான். பொதி சுமக்கும் மாடு, சுமையை சுமந்து சுமந்து சுமையையே தனது வாழ்க்கையாக நினைத் தால், அங்கு சுமையே சுகமாக ஆகி விடுகிறது எனச்சொல்லலாம். ஆனால் இந்நிலையை மனித வாழ்க்கையோடு ஒப்பிட முடியுமா?

நாம் சுயநலமான ஆசைகளிலும், கௌரவத்திற்காகவும், எதிர்பார்ப்புகளிலும், குறிப்பிட்ட காலத்திற்குள் அதிக விளைவு மற்றும் நன்மைகளையும் கருத்திற் கொண்டு தீவிரமாக இயங்க ஆரம்பித்ததாலும், சுமை களுக்குள் கட்டுண்டு சுமைகளை சுமக்கும் கட்டாயத்தில் தள்ளப்பட்டு விட்டோம். உண்மையில், நம்முள் உறங்கிக் கிடக்கும் ஆத்மீக (சுய) சக்திக்கு முன்னே இவ்வுல கிலுள்ள அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டினாலும் நிகராகாது. நமது சுய பலம், சுயநிலை மற்றும் ஆன்மீக சுய மேன்மையில் நிலைத்தாலே போதும் சுமையையும் சுகமாக்கி விடலாம்! நாம் விரும்புவதையெல்லாம் அடைய நினைப்பது இவ்வுலகில் சாத்திய மில்லாதபோது, அதுவே சுமையாகின்றது. அதற்குப்பதிலாக எதை அடைந்துள்ளோமோ அதில் திருப்தியடைந்தால் சுமை ஏது? சுமை களின்றி, பொறுப்புகளையும் கடமைகளையும் தட்டிக்கழிக்கமால், எளிதாக தன் கடமைகளை செய்து கொண்டே பறவைகள் போல சுகமாக பறந்து கொண்டேயிருப்பதாக தோன்றும் சிலரை நாம் பார்த்ததுண்டு. இவர்களால் மட்டும் எப்படி முடிகின்றது என்று ஆச்சரியம் மற்றும் பொறாமை கொள்வது முண்டு, சில நேரங்களில் அது அவர்களின் அதிர்ஷ்டம் என நினைத்து நின்றும் விடுவதுண்டு. ஆனால் இந்த பலனுக்கு பின்னே உழைப்பு ஒழிந்திருப்பது கண்கூடான ஒன்றாகும். □உழைப்பின்றி ஊதிய மில்லை உழைப்புக்கு நிகர் உழைப்பு தான். கடின உழைப்புக்கு மேல் மாற்று ஒரு செயலே கிடையாது என்பர். வாழ்க்கையில் எந்த பலனையும் அதிர்ஷ்டத்தையும் சுகத்தையும் அடைய மூலாதாரம் உழைப்பு ஒன்றே. மற்றவர் களைக் காட்டிலும் அதிகமாக அறிந்திருந்தால், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக உழைத் தால், மற்றும் மற்றவர்களைக் காட்டிலும் குறைவாக எதிர்பார்த்தால் சுகமும் வெற்றியும் உங்கள் வாசலைத்தட்டும் என்று வில்லியம் சேக்ஸ்பியர் கூறியுள்ளார்.

சுமையை நாம் இழுத்துக் கொள்வ தில்லை, ஆனாலும் சுகமாக வாழ ஆசைப்பட்டு

அதிகமாக யோசித்து, தன் திறமைகளை, திக்கு முக்காடச் செய்து மன அழுத்தத்தின் கொடிய விளைவுகளுக்கு இலக்காகி விடுகிறோம். "சிறுதுளி பெரு வெள்ளம்" என்பதற்கிணங்க, சிறு சிறு அனுபவங்களைக் கூட நமக்கு சாதக மாக்கி, தனக்குத்தானே சபாஷ் என்று தட்டிக் கொடுத்துக் கொண்டு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். சிறிய மூலதனத்தை சரியாக பயன் படுத்தினால், வாழ்க்கையில் அரிய அனுபவங் களின் பொக்கிஷத்தை நிந்தரமாக அடைய முடியும். வறுமையைக் கூட சுமையாகவோ, தடையாகவோ, நினைக்காத குசேலர், தன்னால் முடிந்த ஒரு பிடி அவலை இறைவனுக்கு அன்போடு கொடுத்து இறை மதிப்பைப் பெற்றதால் அளவற்ற செல்வங்களை பலனாக அடைந்தார் என்கிறது சாஸ்திரம். **சிறுகச் சிறுக நகருகின்ற நதி நாகரீகத்தின் நாற்றங்கால். நகராமல், தேங்குவது கொசுக்களின் குடியிருப்பு; பாய்கின்ற ஆறு பண்பாடுகளின் அணை- பதுங்கிய தண்ணீர் பாக்டீரியாவின் பண்ணை** என்கின்றார் ஒரு தத்துவஞானி. எதையும் விடாமுயற்சியோடும், உள்ளன் போடும், ஆர்வத்தோடும் செய்தால் அதன் விளைவாக சுகத்தை அடைய முடியும் என்பது திண்ணம்.

ஒவ்வொரு நாளையும் சுகமாக்க முயல்வோம், பிறகு சுகமான வருங்காலம் தானாக வந்துவிடும். அதற்கு ஒவ்வொரு விடியலிலும் சக்திசாலியான எண்ணங்களை உங்களுக்கு நீங்களே எழுப்புங்கள், சுமைகளும் சுமை தாங்காமல் தான் இருந்த இடத்தை விட்டு ஓடிவிடும்.

உலக நாடகத்தில் அனைவரையும் ஒரு சிறப்புத்தன்மையோடுதான் இறைவன் படைத் துள்ளார். ஒருவரிடம் இருக்கும் சிறப்பியல்பு மற்றவரிடம் இருக்க வாய்ப்பில்லை. நமது பாகத்தை நாம் தான் சரியாகச் செய்ய முடியுமே தவிர வேறு யாராலும் முடியாது. இன்று மற்றவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்து தனது சுகத்தைத் தானே சுமையாக்கிக் கொள்ளும் உலகமாக உள்ளது. ஒரு செல்வந்தர் தான் வாழும் வசதியான வீட்டைக் காட்டிலும், அதிக வசதியான வீட்டை விரும்பி, பத்திரிக்கையில் விளம்பரம் செய்யச்சொன்னார். சிறிது நாட்கள் கழித்து அவர் விரும்பிய அனைத்து வசதியும் பொருந்திய ஒரு வீட்டின் விளம்பரத்தை செய்தித்தாளில் கண்டு ஆச்சரியமும், வெட்கமும் அடைந்தார். ஏனெனில், அந்த வீடு வேறுயாருடையது அல்ல, அவரது வீட்டின் முகவரி தான் அது. தன்னை இறைவனுடன் ஒப்பிடுங்கள், மற்றவர் களுடன் ஒப்பிட்டால் ஏமாற்றமே மிஞ்சும்.

எதையும் விரும்பலாம்; ஆனால் ஆசை கூடாது. அந்த விருப்பத்தை அடைய உழைப்பையும் ஆர்வத்தையும் அதிகரித்து, இலக்கை வெற்றிக்கொள்ள முயல வேண்டும். இந்த முயற்சி எதையும் எதிர்நோக்கும் சக்தி யையும் தரவல்லது. ஆனால் ஆசை என்பது கவலையையும். எதிர்பார்ப்பையும் மட்டுமே தரும். அக்கரையை அன்பு என்று தவறு தலாகப் புரிந்து கவலை கொள்வது வழக்கமாகி விட்டது. உண்மையான அன்பில் கவலை யிருக்காது. பற்றில் தான் அக்கரை என்ற கவலை இருக்கும். அன்பால் முடியாதது இவ்வுலகில் வேறு எதனாலும் முடியாது.

மனிதன், சூழ்நிலை, உலகம், வரும் பிரச்சனைகள் மற்றும் அதிஷ்டமின்மை இவை யெல்லாம் சுமைக்கு காரணமல்ல, நாம்தான் நம் சுமைக்கு காரணம். நம் மனதை நமது ஒப்புதலி ன்று யாராலும் சுமையாக்கவோ, காயப்படுத்தவோ முடியாது. மன்னிப்பது என்பது மற்றவர்கள் தவறை மனதில் வைக்காமல் இருப்பதாகும். பிறரது குறைகளை நம் மனதில் வைத்து கறையாக்காமல் மன்னித்து, மனமகிழ்ச்சியை தனதாக்குங்கள்.

பிரச்சனைகள் இல்லாத மனிதன் என்று இவ்வுலகில் யாருமில்லை என்று சொல்லலாம். வாழ்க்கையே ஒரு போராட்டம் தான், அதில் பிரச்சனை இல்லை என்றால் முன்னேற்றம்

இல்லாத வாழ்க்கையாகி விடும். பிரச்சனை நம்மை முன்னேற்றும், **புயலுக்குபின் அமைதி** என்ற பரிசு காத்திருக்கின்றது. பலவிதமான சோதனைத்தாள் வாழ்வில் தேர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தருகின்றது. சிலர் பிரச்சனையை மாற்ற முயலுகின்றார்கள். பிரச்சனையை மாற்ற முடியாது, ஆனால் பிரச்சனை பார்க்கும் விதத்தை ஆக்கபூர்வமாக மாற்றினால், பிரச்சனை தான் வந்த வேலை முடிந்து விட்டது என்று அடுத்தவரை நோக்கி தன் வழியை மாற்றிக்கொண்டு போய்விடும்.

ஒரு பெண், ஒரு மகானிடம் தனது சுமையை நிவர்த்தி செய்ய வாழ்வில் வரும் பிரச்சனைகளைப் பற்றி பல கேள்விகளை கேட்டுக் கொண்டிருந்தார். சற்று பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த அந்த மகானும், அவள் சரிந்திருந்த சுவற்றில் கரப்பான் பூச்சி ஒன்றை சுட்டிக் காட்டினார். உடனே பயந்த வண்ணம் அந்த இடத்தைவிட்டு தீடீரென விலகி ஓடியவரை அழைத்து, அரைமணி நேரமாக உனது சுமைகளைப் பற்றி நீ மிக அமைதியாக கூறிக்கொண்டிருக்கும் பொழுதே உன் தலைமீது தான் அந்த கரப்பான் பூச்சி நகர்ந்து கொண்டிருந்ததைத் தான் பார்த்ததாகக் கூறினார், ஆனால் அந்த நேரம் நீ அதை சுமையாக நினைக்கவில்லை, எந்தவிதமான பயத்தையும் வெளிப்படுத்தவில்லை, அதே சமயம் அது உன்னைவிட்டு சுவற்றில் ஏறிய உடன் அது தன் தலைமீது இருந்ததைக் கேட்டு பயப்படுகின்றாயே என்ன காரணம் என்று வினவினார். நாம் சுமை என நினைத்துக் கொண்டும், நம்மை நோக்கி வரும் பிரச்சனைகளைக் கண்டு பயந்து கொண்டும் வாழ்கின்றோமே ஒழிய, நிகழ்காலத்தில் இனம் தெரியமால் பல பிரச்சனைகளுடன் தான் வாழ்ந்து வருகின்றோம் என்பது அப்பொழுது தான் அவருக்குப் புரிந்தது. வருவதனைத்தும் ஒரு நாள் செல்வது நியதியானால், பிரச்சனையே வாழ்க்கையாகாது. பிரச்சனையில் ஒரு நன்மையைப் பாருங்கள் சுமையும் சுகமாகும்.

மற்றவர்கள் தன்னைப் பாராட்ட நினைக்காது, தன்னைத்தான் பாராட்டுங்கள், மற்றவர்களைப் பாராட்டத் தவறாதீர்கள். மனதை பக்குவப்படுத்தி விட்டால் மனசாட்சி யின் ஒலி அடிக்கடி ஒலிக்கக் கேட்பீர்கள். மனசாட்சியின் குரலை மகிழ்ச்சி யோடு கேளுங்கள், அது ஒரு போதும் பொய் சொல்லாது, அதற்குப் புறம்பாக எதையும் செய்யாமல், சுகமாக வாழ கற்றுக்கொள்ளுங்கள் இவ்வாறு .

தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கும் இந்த உலகத்தில் (டிராபிக் கண்ட்ரோல்) போக்கு வரத்துத் தடைகளைப் போல, நம்மை நாம் நிலைநிறுத்தக் கூடிய கட்டுப்பாடு இருந்தாலே நாம் சுகமாக வாழ முடியும். தியானத்தால் தன்னை கட்டு படுத்தக்கூடிய சக்தியைப் பெற முடியும். இது தனது மனோ சக்தியை, திறனை மற்றும் ஆற்றலை அதிகப் படுத்த கூடியது. ஓடக்கூடிய சக்கரம் எவ்வளவு வேகத்தில் இயங்கினாலும் அச்சாணி நிலைத்தே இருப்பதுபோல், நாமும் உடலால் எவ்வளவு வேகமாக இயங்கினாலும் **மனதால் நிலைத்திருக்கக்கூடிய கலையைக் பயிற்சியாக செய்தால் சுமையைக் கூட சுகமாக்கலாம்.**

நாமும் நமது வாழ்க்கையை
வெற்றிகரமாக்குவோம், எளிதாக்குவோம்;
சந்தோஷத்தை மட்டுமே நமது
சுவாசமாகக் கொள்வோம்;
சங்கீதத்தில் மூழ்குவதுபோல்,
சந்தோஷத்தில் மூழ்கி முத்தெடுப்போம்;
உதவி, மதிப்பு, மரியாதை கிடைக்க வில்லை
என நின்றுவிடாமல், உங்கள் கரங்களோடு
கரங்களை இணையுங்கள் ;
மனமது இணையும் மனதோடு
(இறைமனதோடு)....
வளமது பெருகும் கையோடு...
சுமையது சுகமாகும் அன்போடு....
இவ்வையகம் ஆன்மீக சுகத்தால் நிரம்பி வழிய
சுபமான எண்ணங்களைக் கொள்வோம்.

# ஜெகதாம்பா சரஸ்வதியின் பண்பு நலன்களின் மணி மாலை



ஜெகதாம்பா சரஸ்வதி அன்போடும், மரியாதையுடனும் **மம்மா** என்று அழைக்கப் பட்டார், ஏனென்றால் அவர் குணங்களின் இருப்பிடமாகவும், தெய்வீக சக்தி நிறைந்த வராகவும் இருந்தார். அவரே பிரம்மா குமாரிகள் அமைப்பு எனும் தெய்வீக குடும்பத்தின் தாயாவார். அவருடைய மற்றொரு பெயரான சரஸ்வதி என்பது மிகுந்த பண்பு நலன்களையும் மற்றும் சிறப்புகளையும் ஒவ்வொரு எழுத்துக் களிலும் கூட பிரதி பலிக்கின்றது. **SARASWATI - சரஸ்வதி**

### S - (Spiritual Student) ஆன்மீக மாணவி

மம்மா எப்பொழுதுமே ஆன்மீகப் படிப்பு படிப்பதில் மிகவும் கவனத்துடன் இருந்தார். அதிலும் குறிப்பாக பாபாவின் முரளி வகுப்பை கேட்கும் நேரத்தில் இறைவனின் மகாவாக்கியங் களான முரளிக்காக அவர் ஒரு சாதகப் பறவை யாக காத்திருந்து ஒவ்வொரு ஞானத்தின் துளியையும் சுவைத்தார். மம்மா வின் இறுதி நேரத்தில் உடல் நிலை முற்றிலுமாக சரியில்லாதபோது, அவரால் அமர்ந்தோ அல்லது படுக்கையை விட்டு எழ முடியாத சூழ்நிலையிலும் கூட முரளி வகுப்பைக் கேட்பதற்காக தமது அறையிலேயே ஒலிபெருக்கியின் வாயிலாகக் கேட்க ஏற்பாடு செய்துக் கொண்டார். அவர் எப்பொழுதும் கூறுவதுண்டு. முரளி தான் முதன்மையான படிப்பு சற்றே யோசித்துப் பாருங்கள், நமக்கு யார் படிப்பு கற்றுத் தருவது? சுயம் பரமாத்மாவே ஆன்மீக ஆசிரியராக கற்பிக்கிறார் எனில் அதனைத் தவறவிடலாமா? ஆகவே மம்மா தயாராகி படுக்கையிலேயே தலையணை யின் உதவியுடன் நேரக அமர்ந்து முரளி கேட்பார். உடல் நலமற்ற போதிலும் கூட அவர் முரளியின் ஞான முத்துக்களைக் கேட்க ஒரு மணி ரேநம் வரை அமர்ந்திருப்பார்.

### A - (Authority) சுய பலம்

கராச்சியில் இருந்தபோது ஒருமுறை நீதி மன்றத்திலிருந்து மம்மாவின் மீது வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வாரண்டில் மம்மாவின் தாயாரின் கையெழுத்து இருந்தது. மம்மா வாரண்டை பார்த்ததும் உடன் கூறினார்: இது தவறான கையெழுத்து. நான் உறுதிபட கூறுகிறேன் எனது தாயார் இவ்வாறாக கையெழுத்து போட்டிருக்கவே மாட்டார். மேலும் நான் 18 வயது நிரம்பி விட்டேன். ஆகவே நான் மைனர் அல்ல. இருப்பினும் கூட பாபா நீதிமன்றத்தின் வாரண்டை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகத்தான் இருந்தது. மம்மா நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியிடம் தைரிய மாக கூறினார்: என்னடைய பிறந்த தேதி இது. மேலும் இந்த பிடிவாரண்டில் உள்ளது என்னுடைய தயாரின் கையெழுத்து அல்ல. நீங்கள் அவரிடமே கேட்டுப் பாருங்கள். ஒருவேளை என்னுடைய தாயார் தாமே வாரண்டில் கையெழுத்திட்டிருப்பார் எனில், நான் மனமுவந்து மீண்டும் வீட்டிற்குத் திரும்பி செல்கிறேன். மம்மாவின் தாயாரிடம் நீதிபதி கேட்டபோது அவர் கூறினார்: நான் கையெழுத்து இடவில்லை என்று பதிலளித்தார். இதனால் வேறு வழியின்றி நீதிபதி மம்மாவை விடுதலை செய்தார். அங்கிருந்து திரும்பு வதற்கு முன்பாக இறுதியில் மம்மா மிகவும் தைரியத்துடனும், மரியாதையுடனும் நீதிபதி யிடம் கேட்டார்: ஒரு பெண்ணை

சம்மனில் இவ்வாறு நீதிமன்றத்தின் முன்பு வரவழைப்பது சரியானநடைமுறை யல்லவே என்பதை நினைவூட்டினார்.

மம்மாவின் சக்தி வாய்ந்த மேலும் பயமற்ற தன்மையினால் நீதிபதி முழுமையாக மௌனமாகி விட்டார். மேலும் அவரே மம்மாவின் தைரியத்தை பாராட்டவும் செய்தார். இதன் வாயிலாக மம்மா தனது துர்க்கை ரூபத்தை வெளிப்படுத்தினார்.

### R - (Royality)
### உயரிய கௌரவத்தன்மை

மம்மாவிடம மிகத்துல்லியமான மேலும் உயரிய கௌரவத்தன்மை நிறைந்த பண்பு இருந்தது. அவர் ஒருபோதும் சப்தமாக வாய் விட்டு சிரிக்க மாட்டார். அவர் எப்பொழுமே புன்னகை மட்டுமே புரிந்தவர். மம்மாவின் அன்பு, கனிவு மற்றும் தனித்தன்மையானது மிகவும் ஆற்றல் கொண்டதாக பாபாவின் படிப்பினையை பிரதிபலிப்பதாகவும் இருந்தது. அவரிடம் ஆன்மீக காந்தத்தின் ஈர்ப்பு இருந்தது. இதன் காரணமாக அனைவருக் குள்ளும் நாம் இவருடைய குழந்தைகள் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

### A - (Artistic) கலை நயம்

மம்மா தைரியம், உறுதியான நம்பிக்கை, மன உறுதியின் வாழும் மூர்த்தியாக திகழ்ந்தார். அவர் அனைத்து கலைகளின் களஞ்சியமாக விளங்கினார். அவரிடம் கற்பிக்கும் கலை, பரிபாலிக்கும் மேலும் தீய பண்புகளின் மீது வீழ்த்தும் கலை இருந்தது மேலும் மிகவும் சரளமாகவும் அனைவரையும் மகழ்ச்சியில் கொண்டு வருபவராகவும் இருந்தார். எல்லோ ரையும் ஒற்றுமை எனும் நூலின் கீழ் இணைத்து விடுவதுடன், அனைவரையும் முக மலர்ச்சி கொள்ள செய்தார். தெய்வீக ஞானத் தின் இனிமையினால் அழுபவர் களையும கூட புன்னகைக்கச் செய்தார். தாய் சரஸ்வதி தன்னை சுற்றிலும் தெய்வீக நற்குணங்களின் நறுமணத்தை பரப்புபவராக இருந்தார். குணங்களின் கடலான பரமாத்மா தந்தை சிவனின் மகளாக இருந்தபடியால் அவரும் கூட மாஸ்டர் குணங்களின் வள்ளலாகவே நடைமுறையில் திகழ்ந்தார்.

### S - (Strong Memory)சிறந்த நினைவாற்றல்

மம்மாவின் நினைவாற்றால் மிகவும் உறுதியாக இருந்தது, இதனால் யாரேனும் ஒரு விசயத்தை ஒருமுறை கூறினால் மட்டுமே போதும் அது அவருடைய மனதில் அச்சடிக்கப்பட்டது போல பதிந்து விடும். பாபாவின் ஒரு குறிப்பிட்ட விசயத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு அதனை மிக விஸ்தாரமாகவும், அதில் அடங்கியுள்ள ரகசியத்தை தெளிவுபடுத்துவார். அவருடைய வாழ்க்கையில் ஒருபோதுமே இதனை நீங்கள் கூறினீர்கள் ஆனால் நான் மறந்து போய் விட்டேன் நினைவு செய்து கூறுகிறேன் என்பதெல்லாம் இருந்ததில்லை! மாதேஸ்வரி ஜெகதம்பா சரஸ்வதி எல்லையில்லா நினைவாற்றலின் சக்தியின் மாஸ்டராக விளங்கினார்.

### W - (Wisdom) ஞானம்

பிரம்மா பாபா கூட மம்மாவிடம் இருந்த சிறந்த ஞான வல்லமையை பாராட்டியுள்ளார். அவரிடம் சிறப்பாக ஒருங்கிணைக்கும் தன்மை இருந்தது. அவரிடம் இருந்த ஆளுமை தன்மையால் ஒவ்வொருவரையும் ஒருங் கிணைத்து ஒற்றுமையுடன் மேலும் இயல்பாக காரியம் செய்ய வைக்கும் ஓர் முழுமை பெற்ற தலைவியாக திகழ்ந்தார். இதன் காரணமாகவே அனைவரும் மம்மாவை யக்ஞத்தின் தாய் என போற்றினர். ஒவ்வொருவரின் தேவைகளை அவர்கள் கேட்காமலேயே நிறைவேற்றுபவராக இருந்தார். எவ்வயதினராக இருப்பினும் மொழி, மதம், இனமாக இருப்பினும் கூட ஒன்றுபோல அனைவரிடம் இருந்தபடியால் அனைவரும் இவர் என் மீது அக்கறை உடையவர் என நினைத்தார்கள்.

### A - (Aim and Objective)
### குறிக்கோள் மற்றும் நோக்கம்

யாரேனும் மம்மாவிடம் நீங்கள் எதைப் பற்றி

சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என கேட்டால் அவர் நான் இப்பூலகில் நடக்கவில்லை, நான் வைகுண்டத்தில் இருக்கிறேன் என்பார். அதாவது தனது எதிர்கால லட்சியமான ஸ்ரீ லட்சுமி, விஷ்வ மகாலட்சுமி முதல் இளவரசி ராதை என்ற தெளிவான நினைவு இருந்தது. அவர் ஒருபொழுதும் தனது லட்சியத்தை மறந்திருப்பவராக இருந்ததில்லை.

### T - Trustee ( **நிமித்த பாவனை**)

மம்மாவிற்கு பாபாவின் உயர்வான மகாவாக்கியத்தின் மீது அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. எவரையும் அந்த மகா வாக்கியத்தை விமர்சனம் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. கராச்சியில் இருந்தபோது ஒருமுறை பாபா கூறினார்: மம்மா விடம் எனக்கு 108 கல்ப விருட்ச மரத்தின் சித்திரங்களை 15 நாளில் வேண்டும் என்றார். அதற்கு மம்மா ஆம் பாபா என்று கூறினார். நான் பாபாவிற்கு 15 நாட்களில் 108 கல்ப விருட்ச மரத்தை தருகிறேன் என உறுதி கூறியிருக்கிறேன். அங்கிருந்தவர்களில் ஒரு குழந்தை கூறினார்: மம்மா ஒரு நாளில் 2-3 சித்திரங்கள் செய்வதே மிகவும் கடினமானது, எனவே கூறுங்கள் இது எவ்வாறு இயலும் 15 நாட்களில் 108 சித்திரங்கள் செய்வதற்கு? மம்மா பதிலளித்தார்: இதனை செய்யுங்கள் என நம்மிடம் கூறியிருப்பது யார்? இந்த வார்த்தையானது பரமாத்மாவிடமிருந்து வந்துள்ளது. எனவே அது எவ்வாறு இயலாமல் போக முடியும்? மம்மாவிற்கு இவ்வாறு பாபாவிடம் முழு நம்பிக்கை இருந்தது. தான் எதுவும் செய்யவில்லை அனைத்தையும் பாபா தான் செய்கின்றார் என்ற உணர்வுடன் எப்போதும் இருந்தார்.

### I - (Ideal Mother) **தாயுள்ளம்**


மம்மா தனது இளம் வயதான 17 வயதிலேயே யக்ஞத்திற்குள் வந்து விட்டார். மேலும் தனது இளமைப் பருவத்தில் ஆழ்ந்த தபஸ்யாவிலேயே கழித்தார். மம்மா தாயுள்ளம் கொண்ட ஆசிரியையாக இருந்தார். ஒரு தாயின் முதன்மையான கடமை என்னவென்றால், முழு குடும்பத்தையும் ஒரு கயிறினால் கட்டி அன்பு மேலும் மரியாதையுடன் வழி நடத்துவது. இந்த கடமையை நிறைவேற்றுவதில் மம்மா நம்பர்-1 ஆக இருந்தார்.

சில நேரங்களில் யக்ஞத்தின் இரு குழந்தைகளுக்குள் ஏதாவது மனவருத்தம் இருக்கும் எனில் அதனை முடிவுக்குக் கொண்டு வந்து இருவருக்குள்ளும் சமாதானத்தை ஏற்படுத்தி விடுவார். மம்மா ஒருபொழுதும் யாருடைய குறைகளையும், பலவீனங்களையும் பார்ப்பதில்லை. ஒரு உதாரணமான தாய் என்பவர் தன் குழந்தை களின் பலஹீனங்களையும், குறைகளையும் மாற்றியும் திருத்தியும் விடுவார். மம்மா எச்சரிக்கை அளிப்பதுடன் அவர்களுக்கு யோக சக்தியின் மூலமாக பலசாலியாகவும் ஆக்கி விடுவார்.

மம்மாவிடம் வேறு சில சிறப்புகளாக நேரத்தை நிர்வகித்தல், விசயங்களை எளிதாக கிரகிக்கும் சக்தி மேலும் சேவையில் புதுமையைக் கொண்டு வருதல் போன்றவை இருந்தன. அவர் முற்றிலுமாக தூய்மை மேலும் கம்பீரத் தன்மையின் குணம் கொண்டவராக இருந்தார். தெய்வீக தன்மையும், தனது கடமைகளில் சிறப்பாகச் செயல்படுதல் போன்ற இயல்பான குணங்கள் இருந்தது. இதுவே அவருடைய மிகச் சிறப்பான குணமாக இருந்தபடியால் தனது இளம் பிராயத்திலேயே மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நிமித்தமாகினார்.

மம்மா சிறு வயதினராக இருப்பினும் கூட அவருடைய தலைமை ஏற்கும் பண்பினாலும் மேலும் உள்ளத்தினாலும் ஜெகத்தின் தாயாக விளங்கினார். மம்மா **ஜெகதாம்பா சரஸ்வதியாக** விளங்கியதால் வரவிருக்கும் புது உலகமான சத்யுகத்திலும் ஸ்ரீ லட்சுமி தேவியாகவும் முழு மகாராணியாக உலகினை ஆள இருக்கிறார்

## பேசும் கலை (பி.கு. சிவகுமார் (சீனியர்), சாந்திதாம்)



| | | |
|---|---|---|
| அன்பாகப் பேசு | அமைதியாகப் பேசு | அறிவோடு பேசு |
| அனுபவத்தோடு பேசு | அடக்கமாகப் பேசு | அர்த்தத்தோடு பேசு |
| ஆபூர்வமாகப் பேசு | அமுதவாக்காகப் பேசு | ஆர்வத்துடன் பேசு |
| ஆறுதலான வார்த்தை பேசு | ஆனந்தமாகப் பேசு | ஆதாரத்துடன் பேசு |
| இனிமையாகப் பேசு | இன்முகமாகப் பேசு | இயல்பாகப் பேசு |
| இதமாகப் பேசு | இறைவனோடு பேசு | இடம் பொருள் ஏவலறிந்து பேசு |
| இதயம் தொடும்படி பேசு | ஈடுபாடுடன் பேசு | ஈஸ்வரனின் நினைவில் பேசு |
| ஈஸ்வரிய ஞானம் பேசு | ஈகையுடன் பேசு | உண்மையைப் பேசு |
| உள்ளன்புடன் பேசு | உறுதியுடன் பேசு | உரிமையுடன் பேசு |
| உள்ளம் கனியும்படி பேசு | உத்தரவாதத்துடன் பேசு | உயர்ந்த ஸ்திதியில் பேசு |
| ஊர்ஜிதம் செய்து பேசு | ஊரோடு ஒத்து பேசு | ஊக்கம் உற்சாகத்துடன் பேசு |
| எண்ணிப் பேசு | எளிமையாகப் பேசு | எதுகை மோனையுடன் பேசு |
| ஏக்ரஸ் நிலையில் பேசு | ஏகாந்தமாகப் பேசு | ஏற்றம் தரும் வார்த்தை பேசு |
| ஐம்புலன்களை அடக்கிப் பேசு | ஒற்றுமை ஏற்படப் பேசு | ஒழுக்கமாக பேசு |
| ஓம்சாந்தி மகிமையைப் பேசு | ஒப்புதலுடன் பேசு | ஓங்கார ஜோதியை நினைத்துப் பேசு |
| கவனத்தோடு பேசு | கனிவாகப் பேசு | கருணையுடன் பேசு |
| கம்பீரமாகப் பேசு | கலகலப்பாகப் பேசு | கருத்துடன் பேசு |
| கண்ணியமாகப் பேசு | கட்டுப்பாட்டுடன் பேசு | கடமை உணர்வுடன் பேசு |
| காலத்தை உணர்ந்து பேசு | காதுக்கினிய பேசு | காலத்தை உணர்ந்து பேசு |
| குறைவாகப் பேசு | குஷியோடு பேசு | குறிப்பறிந்து பேசு |
| குணம் நிறைந்து பேசு | குழந்தையாகிப் பேசு | குதூகலமாகப் பேசு |
| கூர்மையான புத்தியுடன் பேசு | குணங்களைப் பேசு | கூர்ந்து கவனித்துப் பேசு |
| சத்தியமாகப் பேசு | சக்திசாலியாகப் பேசு | சரளமாகப் பேசு |
| சகஜமாகப் பேசு | சந்தோஷமாக பேசு | சரியானதை பேசு |
| சம்மதத்துடன் பேசு | சாந்தமாகப் பேசு | சதா சிவனை நினைத்துப் பேசு |
| சிந்தித்துப் பேசு | சிநேகமாகப் பேசு | சிகரம் போல் பேசு |
| சீராகப் பேசு | சீதளமாகப் பேசு | சுபபாவனையுடன் பேசு |
| சுத்த எண்ணத்தோடு பேசு | சுந்தரமாகப் பேசு | சுதந்திரமாகப் பேசு |
| சுகமான வார்த்தையைப் பேசு | சுய நிலையில் பேசு | சுகதாமத்தைப் பற்றி பேசு |

இன்னும் எத்தனையோ......

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அன்னபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர்,சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை- 5 R.No.49463/87